வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk மலர் : 04 21.09.2023 வியாழக்கிழமை இதழ் : 285 பக்கங்கள் : 16

# நாகபட்டினம் - காங்கேசன் இடையே ஒக். 15இற்கு முன்னர் கப்பல் சேவை!

## தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர்

சென்னை, செப். 21

**நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்பாக கப்பல் போக்குவரத்து தொடங்குவதற்கு வாய்ப்புள்ளது என்று தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் எ. வ. வேலு தெரிவித்துள்ளார்.**

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கப்பல் போக்குவரத்து தொடங்கவுள்ளதையடுத்து முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளையும், சுங்கத் துறைக்கு சொந்தமான படகில் கடலுக்குள் சென்று பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறை முகங்கள் அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு செய்தார் .

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

நாகபட்டினம் சிறு துறைமுகத்திலி ருந்து, 60 கடல் மைல்கள் தொலைவில், இலங்கையிலுள்ள 11

## திலீபனின் நினைவுக்கு தடை கோரிய யாழ். பொலிஸாரின் வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், செப். 21

திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாண பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்க கோரி, ஆறு பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கடந்த 18 ஆம் திகதி நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரான திலீபன் என்பவரை நினைவு கூரும் செயற்பாடு இலங்கை சோசலிச குடியரசின் வர்த்தமானியின் படி, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான தேசிய ஒருமைப்பாடுகள் சட்டத்தையும் மீறுவது எனவும், தற்போது நடத்தப்படும் பேரணியை 1979 ஆம் ஆண்டு 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைச் சட்டத்தின் கீழ் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் தங் கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். 11

## ரணிலுக்கு எதிராக இன்று நியூயோர்க்கில் போராட்டம்!

நியூயோர்க், செப். 21

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராக வட அமெரிக்க தமிழ்மக்களை அணி திரளுமாறு நாடுகடந்த அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து நாடு கடந்த தமிழீழ அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

நியூயோர்க் மாநகரில் அமைந்துள்ள ஐ.நா வில் பேசுவதற்கு வருகை தரும் ரணில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டுவிட்டதாகக் கூறியவர். எமது உடன் பிறப்புகளின் கொலையில் இவருக்கும் தொடர்பு இருப்பது தீவிர சந்தேகத்தை எழுப்புகிறது. 11

## வடக்கில் டிசெம்பருக்குள் காணிகள் விடுவிக்கப்படும்

### செல்வம் எம்.பிக்கு அமைச்சர் பதில்

கொழும்பு, செப். 21

வடக்கு மாகாணத்தில் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் மீள கையளிக்கப்படும் என வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் மேற் கொள்ளப்படும் தீர்மானங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்படுவதில்லை என 11



## யாழ்.ஆதார வைத்தியசாலைகளில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகளில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும், தரமான மருந்துகள் அரச வைத்தியசாலைகளில் இருப்பதை 11

## மின்சார கட்டணத்தை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 21

நாட்டின் 70 வீத மின்சாரத் தேவையை புதுப்பிக்கத் தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி, மின் கட்டணத்தைக் குறைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த 11

## அரசாங்கத்துக்கு எதிராக நாளை பெரும் போராட்டம்

### சுகாதாரத்துறை செயலிழக்கும்

கொழும்பு, செப். 21

அரசாங்கத்துக்கு எதிராக நாளை வெள்ளிக்கிழமை பெரும் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்களும் ஏனைய சில தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன.

"சுகாதார சேவைகள் ஆபத்தில்" என்ற தொனிப் பொருளின் கீழ் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாக சுகாதார சேவைகள் ஒன்றியத்தின் உறுப்பினர் வைத்தியர் ஜெயந்த பண்டார தெரிவித்தார். 11

## ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நான் கடுமையாக பேசுவேன்!

### கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, செப். 21

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த நான்கு வருடங்களாக துன்புறுத்தியபோதிலும் தற்போது தான் உண்மை வெளிவருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் சபையில் நடைபெறும் விவாதத்தில் கடுமையாகப் பேசுவேன் என்றும் அவர் கூறினார்.

பொலனறுவையில் இடம்பெற்ற 11

## பயங்கரவாத திருத்தச் சட்டத்தின் மூலம் மீண்டுமொரு அடக்குமுறைக்கு முயற்சி!

### சபையில் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி செல்லும் இடம் எல்லாம் ஜனநாயகத்தைப் பற்றி பேசிக் கொண்டு நாட்டில் பயங்கரவாத திருத்தச் சட்டத்தின் மூலம் மீண்டுமொரு அடக்குமுறையை கொண்டுவருவதற்கான முயற்சியை மேற்கொள்வது நியாயமற்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது விசேட கூற்று ஒன்றை முன் வைத்து கருத்துரைக்கும்போதே 11

## இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா 19 மில்லியன் டொலர் உதவி!

கொழும்பு, செப். 21

இலங்கையின் அபிவிருத்திக்காக 19 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்க தீர்மானித்துள்ளதாக கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

குறித்த நிதியானது சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்துக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான அபிவிருத்திக்கான உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியுதவியானது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதாக அமையும் என்றும் அது குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது

தியாகி திலீபனின் ஊர்தி மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி நேற்றும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுவாமி சங்கரானந்தா என்ற பெயரில் முகநூலில் எழுதப்பட்டிருந்த பதிவு ஒன்றை நண்பர் ஒருவர் பகிர்ந்திருந்தார். யார் இந்த 'சுவாமி' என்பதை அறிய முயன்றபோது அப்படியொருவர் முன்னர் திருகோணமலையில் வாழ்ந்தாரெனவும் இப்போது அவர் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழ்கிறார் என்றும் நண்பர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

அவர் தெரிவித்திருக்கும் கருத்துகளுடன் முழுமையாக இந்த ஊர்க்குருவிக்கு உடன்பாடு இல்லை என்றாலும் அவர் இதுபோன்ற சம்பவம் ஒன்று முன்னர் நடந்தது பற்றி எழுதியிருப்பது நமது கவனத்திற்குரியது. அதனால் அந்தச் சம்பவம் பற்றி அவர் எழுதியிருப்பதை அப்படியே கீழே தருகின்றேன்.

'தமிழரசு கட்சியின் ஸ்தாபகரும் 'தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறி 'விடுதலை பெற்ற தனித் தமிழீழமே ஒரே தீர்வு' என்ற வரலாற்று புகழ்மிக்க வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றியவரும் ஈழத் தமிழ் மக்களால் தந்தை செல்வா என்று அழைக்கப்பட்டவருமான சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி மரணமானார்.

அந்தக் காலத்தில் எந்த தலைவருக்கும் திரளாத மக்கள் கூட்டம் அவரது இறுதி ஊர்வலத்தில் திரண்டு, எழுச்சி கொண்டு எழுந்து அவரது மரணத்துக்கு அஞ்சலி செலுத்தினார்கள். இதன் பின்னர் தந்தை செல்வாவின் அஸ்தி அதே 1977ஆம் ஆண்டே, தமிழரசு கட்சியால் (அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி) திருகோணமலை நகரத்தில் உள்ள சிவன் கோவிலடி பகுதியில் சிலை அமைக்கும் நோக்கத்தோடு திருகோணமலைக்கு எடுத்து வரப்பட்டது.

திருகோணமலை அநுராதபுர சந்தியை வந்தடைந்த போது நரித்தனமாக யோசித்த தமிழரசு கட்சி, சிங்கள மக்களை சீண்டி இனக் கலவரத்தை தூண்டி தமிழ் மக்களின் வாக்குகளை சுவீகரிக்கும் எண்ணம் கொண்டு, அநுராதபுர சந்தியில் இருந்து சிவன் கோவிலடியை சென்று அடைய லிங்கநகர், உவர்மலை, சிவபுரி என்ற தமிழர் வாழும் பிரதேசங்கள் ஊடாக பாதை இருந்தும் அதனை புறக்கணித்து அபயபுர, மகிந்தபுர, சிறிமாபுர என்று சிங்களவர் வாழும் பிரதேசங்களின் ஊடாக கொண்டு வந்த போது, சினம் கொண்ட சிங்களவர்களால் சிறிமாபுரவில் வைத்து குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், சில தமிழ் மக்கள் காயமடைய, தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தினால் பல தமிழர்கள் கொல்லப்பட்டு தமிழர்களின் சொத்துகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆக மொத்தத்தில் இனவாதத்தை தூண்டி தமிழ் மக்களின் வாக்கை சுவீகரிக்கும் நோக்கத்தோடு தமிழ் மக்களின் துன்பங்களில் பதவியை பெற்றுகொண்ட அரசியல்வாதிகள், இன்றுவரை தமிழ் இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் வழியை நிரந்தரமாக அடைத்ததுதான் மிச்சம்.' - இப்படிச் செல்கின்றது அந்தப் பதிவு. இதற்கு பின்னர் அவர் எழுதியிருப்பவை தற்போது நடந்துகொண்டிருக்கின்ற சம்பவங்கள் பற்றியவை என்பதால் அதனைத் தவிர்த்துக் கொள்கின்றோம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்கை முழுமையாகவும் கிழக்கின் பெரும்பகுதியையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதுகூட வடக்கு - கிழக்கு தழுவிய எந்த ஊர்வலத்தையும் நடத்தவில்லை என்பதையும் அவர் அந்தப் பதிவில் நினைவுகூர்ந்திருக்கிறார்.

திலீபனின் ஊர்தி மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்திய சில நாட்களிலேயே கொழும்பில் திலீபனுக்கு நினைவஞ்சலி வைபவத்துக்கு கிறிஸ்தவ ஒத்துழைப்பு இயக்கம் ஏற்பாடு செய்திருக்கின்றது.

திலீபனை நினைவு கூருவதல்ல முக்கியம். அந்த நிகழ்வை சுமுகமாக நடத்தி முடிப்பதுதான் புத்தி சாதுர்யமானது. அந்த ஊர்திப்பயணத்தில் இப்போதும்கூட ஒரு சிலரை மாத்திரமே காணமுடிகின்றது. திலீபனை நினைவுகூருகின்ற ஒரு வைபவத்தில் நூற்றுக்கணக்கானவர்களை திரட்ட முடியாத நாம், அவரின் தியாகத்தை முதலில் தமிழ் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும். அதுவே, அவருக்கு தமிழ் மக்கள் செய்யவேண்டிய உண்மையான அஞ்சலி.

- ஊர்க்குருவி.

# ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டால் நிர்வாகக் கட்டமைப்புகள் சீர்குலையும்

## எச்சரிக்கை விடுக்கிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, செப். 21

"ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு அரசு முற்படுமானால் நாட்டில் நிர்வாகக்கட்டமைப்பு முழுமையாக சீர்குலையும். சர்வதேச மட்டத்தில் எந்தவொரு சட்டப்பூர்வமான நகர்வுகளிலும் ஈடுபடமுடியாமல்போகும்."

- இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான சட்டத்துறை பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க இடமளிக்க மாட்டோம். தேசிய ரீதியில் போராட்டங்கள் நடத்தப்படும் என்பதுடன், சர்வதேசத்தையும் நாடுவோம். இலங்கையில் சர்வாதிகாரி உருவாக இடமளிக்க மாட்டோம் எனவும் பீரிஸ் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நிலையில், தேர்தலை நடத்துவதற்கான சூழல் அதுவல்லவெனவும், பொருளாதாரம் ஸ்திரம் அடையும்வரை ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படவேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். அவரின் இந்த கருத்து படுபயங்கரமாகும்.

இன்னும் இரு மாதங்களில் முன் வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் உணவு, எரிபொருள் உள்ளிட்டவற்றை வாங்குவதற்குகூட நிதி இருக்காது என்ற கோணத்திலும் அவர் கருத்து முன்வைத்திருந்தார். இது ஜனநாயகத்துக்கு விரோதமான கருத்தாகும்.

2024 ஒக்ரோபர் மாதத்துக்குள் கட்டாயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது தான் நாட்டு சட்டம். 2024 நவம்பரில் புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டும்.

வஜிர அபேவர்தன கூறுவது போல் ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் என்ன நடக்கும்? 2024 ஒக்ரோபருக்கு பின்னர் நாட்டில் சட்டவிரோத - அரசமைப்புக்கு முரணான ஜனாதிபதியே ஆட்சியில் இருப்பார். அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்த முடியாமல்போகும்.

முப்படையினருக்கு எந்தவொரு கட்டளையையும் பிறப்பிக்க முடியாது, பலவந்தமாக ஆட்சியில் தொடரும் ஜனாதிபதியால் பிறப்பிக்கப்படும் உத்தரவை படையினரால் செயற்படுத்த முடியாது. பொலிஸாருக்கும் கட்டளை பிரயோகிக்க முடியாது. சட்டவிரோத ஜனாதிபதிக்கு மக்களிடம் இருந்து வரி அறவிடமுடியாது. தூதுவர்களை நியமிக்க முடியாது. ஆளுநர்களையும் நியமிக்க முடியாது. இதனால் மாகாண மற்றும் உள்ளாட்சி நிர்வாகக் கட்டமைப்பும் சீர்குலையும்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பரிஸ் கிளப் போன்றவற்றுடன் சட்டப்பூர்வமான நகர்வுகளை முன்னெடுக்க முடியாமல் போகும். சட்டப்பூர்வமற்ற ஆட்சியின்கீழ் மேற்படி அமைப்புகள் கொடுக்கல் - வாங்கல்களில் ஈடுபடாது - என்றார். (அ)

# இலங்கை பொருளாதார மீட்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு தொடரும்

## ரணிலிடம் தெரிவித்தார் சமந்தா பவர்

நியூயோர்க், செப். 21

இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே வேளையில் தேவையான நிபுணத்துவ உதவிகளையும் வழங்கும் என்று அதன் பிரதானி சமந்தா பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78 பொதுச்சபை கூட்டத்தொடருக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா சபையின் இணைக் காரியாலயத்தில் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவரை சந்தித்தார்.



இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம்கொடுத்திருந்தபோது ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய சுருக்கமான விளக்கமளித்த ஜனாதிபதி, அதனை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் எடுத்துரைத்தார்.

மேலும், ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக்கொண்டதன் பின்னரான செயன்முறைகள் தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு பயிற்சி பெற்ற பணியாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பிலான சவாலுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும், அதனால் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளமையின் பலன்களை அடைந்துகொள்ள இன்னும் இரண்டு வருடங்கள் அவசியப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஊழலுக்கு எதிரான கொள்கையை அமுல்படுத்துவதற்கு தமது அரசாங்கத்தின் முழு அரச பொறிமுறையும் முழுமையாக உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, இந்த செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்வதற்கு தேவையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

'அஸ்வெசும' வேலைத்திட்டத்தின் அறிமுகத்தினூடாக நலன்புரித் திட்டங்களின் வினைத்திறன் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் இந்த சந்திப்பின் போது ஜனாதிபதியினால் விளக்கமளித்தார். (அ)

# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்கு வைத்தியசாலைகளில் பெரும் பற்றாக்குறை

கொழும்பு, செப். 21

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று முதல் பெட் ஸ்கான் பரிசோதனையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கதிரியக்க அதிகாரிகளின் பற்றாக்குறையே இதற்கான காரணமெனச் சங்கத்தின் தலைவர் சானக தர்மகீர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஜீ.விஜேசூரியவிடம் வினவியபோது, சுகாதார அமைச்சரின் ஆலோசனைக்கமைய பயிற்சிகளை நிறைவு செய்த கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களை ஈடுபடுத்தி இந்த பிரச்னைக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
21.09.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஐ. நாவின் மீதான நம்பிக்கை

ரெலோ அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் அண்மையில் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார் – தமிழ் மக்கள் ஐ. நா. மீது நம்பிக்கையிழந்து வருகின்றனர். செல்வம் அடைக்கலநாதன் கூறுவதில் தவறு இல்லை. மக்கள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் நம்பிக்கையிழந்துவிட்டனர். யுத்தம் முடிவுற்ற போதிருந்த ஐ. நா. கவர்ச்சி இப்போதில்லை. மெதுமெதுவாக மங்கிவருகின்றது. காலப்போக்கில் இல்லாமலும் போய்விடலாம். ஒரு சிறிய குழுவினர் மட்டும் அவ்வப்போது இதனை உச்சரித்துக் கொள்ளலாம்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் முன்னைநாள் ஆணையாளர் நவிப்பிள்ளையே, இதுபற்றி ஒரு முறை கூறியிருந்தார். ஐ. நா. மனித உரிமைகள் பேரவையானது புவிசார் அரசியலாலும் குறுகிய தேசியவாத நலன்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. இதற்கு மேல் ஐ. நாவின் பலவீனம் தொடர்பில் விவாதிக்க ஒன்றுமில்லை. நவிப்பிள்ளையை விடவும் நாம் எதனையும் கூறவிட முடியாது.

அவ்வாறாயின், ஐ. நாவினால் எவ்வித பயனுமில்லையா என்று கேட்டால் – பயன் உண்டு. அதாவது, நமது பிரச்னையை ஏதோவொரு வகையில் சர்வதேச அரங்கில் பேசுபொருளாக பேணிப் பாதுகாப்பதில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தலையீடுகளுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. ஆனால், அந்த அழுத்தங்களால் பாலாறும் தேனாறும் ஓடுமென்று நம்புவதில்தான் பிரச்னையுண்டு. நமது பிரச்னை பேசுபொருளாக இருக்கின்றபோது – மறுபுறம் சர்வதேசத்துடன் ஒத்துழைக்கக் கூடிய அரசாங்கமொன்றும் உள்நாட்டில் இருக்கும்பட்சத்தில், சில விடயங்களை சாதிக்க முடியும். உதாரணமாக உள்ளக கடடமைப்புகளில், படிப்படியான மாற்றங்கள், அரசியலமைப்பில் இருப்பவற்றை படிப்படியாக அமுல்படுத்துவது – போன்ற விடயங்களை சாதிக்க முடியும். அதற்கு இவ்வாறான சர்வதேச கவனக்குவிப்பு அவசியம்.

ஐ.நாவின் தோல்விக் கதை உலகளவில் அறிந்த ஒன்று. இது பற்றி ஓய்வுபெற்ற ஐ. நா. அதிகாரிகளே எழுதியிருக்கின்றனர். முள்ளிவாய்க்கால் விடயத்தில் மட்டும் ஐ. நா. பாதிக்கப்பட்ட மக்களை கைவிடவில்லை. அந்தப் பட்டியல் மிகவும் நீண்டது. அது ருவாண்டா, குவாட்டமலா என நீண்டு செல்லும். முள்ளிவாய்க்காலை விடவும் மோசமான அழிவுகளின்போது கூட, ஐ. நா. வெறும் பார்வையாளராகவே இருந்தது. நவிப்பிள்ளை கூறிய விடயம்தான் இதற்கான காரணமாகும். பலம்பொருந்திய நாடுகளை கட்டுப்படுத்தக் கூடிய பொறிமுறை ஐ. நாவிடம் இல்லை. இதன் காரணமாகத்தான் அமெரிக்காவின் முன்னாள் அதிபர், ட்ரம்ப் ஐ. நாவை பொழுது போக்குமிடமென்று வர்ணித்திருந்தார். அமெரிக்காவில் குடியரசு கட்சி ஆட்சிக்கு வரும் சந்தர்ப்பங்களில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கடுமையாக தாக்கப்படுவதுண்டு. பேரவையில் நிறைவேற்றப்பட்ட இஸ்ரேல் தொடர்பான பிரேரணைகளே இதற்கான காரணமாகும்.

புவிசார் அரசியல் முரண்பாடுகள் – இலகுவாக கூறுவதானால், பலம்பொருந்திய நாடுகளின் அதிகாரப் போட்டியின் ஊடாகவே உலகம் நகர்கின்றது. இதில் ஐ.நாவால் எந்தவொரு தலையீட்டையும் செய்ய முடியாது. வெறும் பரிந்துரைகளை மட்டுமே முன்வைக்க முடியும். இந்தப் பின்புலத்தில் பலம்பொருந்திய நாடுகளின் ஆதரவில்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் நன்மையை பெற முடியாதவொரு சூழலே அரசியல் யதார்த்தமாக இருக்கின்றது. தற்போதைய சூழலில், நிலைமைகள் இன்னும் வேகமாக மாறிவருகின்றன. உலகம் அதிகம் பிராந்திய செல்வாக்குக்குள் முடங்குகின்றது. பிராந்திய சக்திகளே பிரதான பங்கை வகிக்கின்றன. இந்தப் பின்புலத்தில்தான் இந்தியாவின் தலையீடு நமக்கு முக்கியமாகின்றது. ஆனாலும் இந்தியாவுக்கும் வரையறைகள் உண்டு.

# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க பஸில் ராஜபக்ஷ தகுதி உடையவர்!

## கூறுகிறார் விமலவீர திஸாநாயக்க

கொழும்பு, செப். 21

பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு பஸில் ராஜபக்ச தகுதியானவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அக்கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலுக்கு நாம் தயாராகிவருகின்றோம். அதற்கிடையில் எந்தத் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்ளவும் தயார். கடந்தமுறை இறுதி நேரத்தில்தான் மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்பட்டார், இம்முறையும் இறுதி நேரத்தில் பெயர் திரைநீக்கம் செய்யப்படும்.

கோட்டாபயவுக்கு பதிலாக பஸில் ராஜபக்ஷவை களமிறக்குமாறு கடந்த முறையும் நான் வெளிப்படையாக கூறியிருந்தேன். அடுத்த முறை களமிறங்குவதற்கும் பஸில் ராஜபக்ஷ பொருத்தமானவர் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்-என்றார்.(அ)

# கலாசாலையில் நூற்றாண்டு கால சிறப்புரை





யாழ்ப்பாணம், செப். 21

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு கால சிறப்புரைத் தொடரில் நேற்று புதன்கிழமை கலாசாலையின் முன்னாள் உப அதிபர் செல்வி விஜயராணி வேலுப்பிள்ளை கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வைக் கலாசாலையின் முதலாம் வருட ஆங்கில நெறிசார்ந்த ஆசிரிய மாணவர்கள் நெறிப்படுத்தினர். அதிதி அறிமுக வுரையினை கலாசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மேகிலா உமாசுதன் ஆற்றினார்.

நிகழ்வின் போது அதிதியாகக் கலந்து கொண்ட செல்வி விஜயராணி வேலுப்பிள்ளையை கலாசாலையின் அதிபர் மற்றும் முகாமைக்குழுவினர் பொன்னாடை அணிவித்தும் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவித்தனர். (அ)

# வாக்குவேட்டை நடத்துவதற்காகவா கஜேந்திரன் எம்.பி. மீது தாக்குதல்?

## சபையில் இராதாகிருஷ்ணன் கேள்வி



கொழும்பு, செப். 21

தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இன முறுகலை ஏற்படுத்தி அதன்மூலம் வாக்குவேட்டை நடத்தி ஆட்சியை கைப்பற்றும் நோக்கிலேயே பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ. இராதா கிருஷ்ணன் எம்.பி.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:


செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதலின் பின்னணி குறித்து எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது. நாட்டில் தமிழ், சிங்களமக்கள் மத்தியில் இனக்கலவரத்தை ஏற்படுத்தி அதன்மூலம் தேர்தலுக்கு சென்று தேர்தலில் வெற்றிபெறலாம் என்ற எண்ணம் பெரும்பான்மை தலைவர்களுக்கு இருக்கக் கூடும்.

வாக்குவேட்டை நடத்துவதற்காக அவ்வாறான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

சிங்கப்பூரில் தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகியுள்ளார். இந்த நாட்டில் அது முடியுமா? முடியாது. ஆனால் அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட்டு, தமிழர் ஒருவர் ஜனாதிபதியாகக் கூட வரலாம் என்ற சூழ்நிலை இலங்கையில் உருவாக வேண்டும்-என்றார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
அக்கம் பக்கம் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**
பிள்ளை களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்களின் உதவிகளை நாடுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும்.

**கடகம்**
குடும்பத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். புது தொழில் தொடங்குவீர்கள்.

**சிம்மம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அழகும் இளமையும் கூடும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்துபோகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். இடம்பொருள் ஏவல் அறிந்து செயல்படவும்

**தனுசு**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனதை வாட்டும். உறவினருடன் பகை வந்து செல்லும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**கும்பம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

### காவிரி நீரை திறக்க உத்தரவிடுக:

# தமிழ்நாட்டின் அனைத்து கட்சிகளின் எம். பிக்களும் மத்தியிடம் வலியுறுத்து!

சென்னை, செப். 21

காவிரியில் கர்நாடக அரசு தமிழகத்துக்கு உரிய தண்ணீரை திறந்துவிட வலியுறுத்தி டில்லியில் மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் செகாவத்தை, அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழக அனைத்து கட்சி எம். பிக்கள் குழு சந்தித்து மனு அளித்துள்ளது.

காவிரி தொடர்பாக உச்ச நீதிமன்றம் கடந்த 2018ஆம் ஆண்டு அளித்த தீர்ப்பின் அடிப்படையில், மாதாந்திர நீர் அளவு அட்டவணை நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி, செப்.14ஆம் தேதி நிலவரப்படி, கர்நாடக அரசு தமிழகத்துக்கு வழங்கவேண்டிய 103.5 டி. எம். சியில் 38.4 டி. எம். சி. மட்டுமே திறந்துவிட்டுள்ளது. இது குறித்து, காவிரி மேலாண்மை ஆணையம், காவிரிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை உத்தரவிட்டும் கர்நாடகா தண்ணீர் திறக்காமல் உள்ளது. இது குறித்து உச்ச நீதிமன்றத்தை தமிழக அரசு நாடியுள்ளது.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி, அமைச்சர் துரைமுருகன் தலைமையில், அனைத்து கட்சி எம். பி.க்கள் அடங்கிய குழு, நேற்று முன்தினம் சந்தித்தனர். இந்தக் குழுவில், டி.ஆர்.பாலு (தி. மு. க.), மு. தம்பிதுரை, சந்திரசேகரன் (அ. தி. மு. க.), எஸ்.ஜோதிமணி (காங்கிரஸ்), கே.சுப்பராயன் (இந்திய கம்யூ.), பி.ஆர். நடராஜன் (மார்க்சிய கம்யூ.) வைகோ (ம. தி. மு. க.) உள்ளிட்ட அனைத்து கட்சியினர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, கர்நாடகா தண்ணீர் இல்லை என்றாலும் தமிழகத்துக்கு 5 ஆயிரம் கன அடி நீர் திறக்கும்படி கூறியுள்ளோம் என்று மத்திய அமைச்சர் கூறினார் என்று அமைச்சர் துரைமுருகன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ஐ)

# இடஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இருக்க வேண்டும்!

## முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்து

சென்னை, செப். 21

ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா. ஜ. க. விரும்பவில்லை. எனவேதான் அவர்கள் சமூக நீதிக்கு எதிராக இருக்கிறார்கள். இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களிடம் இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் இரண்டாவது தேசிய மாநாடு டில்லியில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக பங்கேற்று தலைமையுரை ஆற்றினார்.

இதன்போது, "திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் சமூக நீதியைத்தான் இயக்கத்தின் இலக்கணமாக வைத்துள்ளது. இந்த இயக்கம் உருவாகக் காரணமே சமூகநீதிதான். சமூகநீதி - சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காகவே திராவிட இயக்கம் தோன்றியது.

தமிழ்நாட்டை பார்த்து பல்வேறு மாநிலங்கள் சமூகநீதியை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியது மட்டுமல்ல, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அத்தகைய உரிமை கிடைக்க வழி காட்டியதும் திராவிட இயக்கம்தான். தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களின் காரணமாகத்தான் இந்திய அரசமைப்பு சட்டமே முதன்முறையாக திருத்தப்பட்டது.

சமூகநீதியை நிலைநாட்ட நாம் போராடி வந்தாலும் - சமூகநீதிக்கான தடைகளும் விழவே செய்கின்றன. இதில் பா. ஜ. க. பெரிய அளவிலான தடுப்புச் செயல்களை செய்து வருகிறது. சமூகநீதியை முறையாக பா.ஜ.க. நடைமுறைப்படுத்துவது இல்லை. கடந்த 9 ஆண்டு காலத்தில் ஒன்றிய அரசின் துறைகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை.

ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை. எனவேதான் அவர்கள் சமூக நீதிக்கு எதிராக இருக்கிறார்கள். இடஒதுக்கீடு வழங்கும் அதிகாரம் மாநிலங்களிடம் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)

# பாராளுமன்ற தேர்தல் கூட்டணி; கமல்ஹாசன் கட்சி ஆலோசனை

சென்னை, செப். 21

நடிகர் கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் கட்சி, தமிழகத்தில் கடந்த சட்டசபை தேர்தலில் போட்டியிட்டது. ஆனால், எந்த ஒரு தொகுதியிலும் அந்த கட்சி வெற்றி பெறவில்லை. கமல்ஹாசன் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்டு குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவினார்.

இந்தநிலையில் பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வருகிறது. பாராளுமன்ற தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சி எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் கமல்ஹாசன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கமல்ஹாசன் போட்டியிட்டால் எந்தத் தொகுதியில் வெற்றி வாய்ப்பு உள்ளது என ஆய்வு செய்யப்பட்டது.

கோவை, தென்சென்னை அல்லது மதுரை ஆகிய 3 தொகுதிகளில் எதாவது ஒரு தொகுதியில் போட்டியிட்டால் வெற்றி பெற்று விடலாம் என கட்சி நிர்வாகிகள் கருதுகிறார்கள்.

ஏற்கனவே, கோவை தெற்கு தொகுதி சட்டசபை தொகுதியில் கமல்ஹாசன் போட்டியிட்டு உள்ளதால், தொகுதி மக்களுக்கு அவர் பரீட்சயமானவராக மாறி விட்டார். இதனால் கோவை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட்டால் வெற்றி எளிதாக இருக்கும் என நிர்வாகிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இதையடுத்து கோவை தொகுதியை குறிவைத்து கமல்ஹாசன் காய் நகர்த்தி வருகிறார். பெரிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டால் வெற்றி எளிதாகும் என்பதால் தனித்து போட்டி என்ற முடிவில் இருந்து கூட்டணி அமைத்து போட்டி என்ற நிலைப்பாட்டில் கமல்ஹாசன் இருக்கிறார்.

தற்போது கமல்ஹாசன், காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியுடன் நட்பு ரீதியாக நெருக்கமான நிலையில் இருக்கிறார். இதனால் காங்கிரஸ் - தி.மு.க. அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியில் இணைந்து அவர் போட்டியிடலாம் என கூறப்படுகிறது. அந்த கூட்டணியில் சேரும் பட்சத்தில் கமல்ஹாசன் எதிர்பார்க்கும் தொகுதி கிடைக்குமா என்பது சந்தேகமே? இருந்தாலும் கூட்டணி கட்சி தலைவர்களிடம் பேசி எப்படியாவது கேட்கும் தொகுதியை பெற்று விடலாம் என மக்கள் நீதி மய்யம் கட்சியினர் நம்பிக்கையுடன் உள்ளனர்.

அப்படி கேட்கும் தொகுதி கிடைக்காவிட்டால் என்ன செய்வது, அடுத்தக்கட்ட நகர்வு என்ன? என்பது பற்றியும் கமல்ஹாசன் ஆலோசித்து வருகிறார். இந்தநிலையில் அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியில் தற்போது சிறுஉரசல் ஏற்பட்டுள்ளது. அந்த அணியில் இருந்து பா.ஜ.க. வெளியேறிவிட்டால் அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேரலாமா? என்பது பற்றியும் மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் ஆலோசித்து வருகிறார்கள்.

பாராளுமன்ற தேர்தலில் யாருடன் கூட்டணி அமைப்பது என்பதை நாளை கோவையில் நடைபெறும் கூட்டத்தில் கமல்ஹாசன் முடிவு செய்யவுள்ளார் - என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# தேர்தலுக்காக பணம் ஒதுக்கினால் எரிபொருட்களை வாங்க முடியாது!

## வஜிர அபேவர்த்தன எம். பி. சொல்கிறார்

கொழும்பு, செப். 21

**எதிர்வரும் வரவு - செலவு திட்டத்தில் தேர்தலுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டால் மக்களுக்குத் தேவையான பெற்றோல், டீசல், எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையாகமான சிறிகொத்த வில் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விரைவில் தேர்தல் வருமா என சிலர் கேட்கின்றனர், ஆனால் முதலில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும், தேர்தலுக்கு தேவையான பணத்தை கண்டுபிடிக்க வேண்டும், அதன் பிறகு எந்த தேர்தலையும் நடத்தலாம் என வஜிர மேலும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஒத்திவைப்பு மற்றும் ஏனைய விளையாட்டுகள் குறித்து வஜிர இதற்கு முன்பு பலமுறை முயற்சித்தார். எனவே வஜிர இம்முறையும் அவ்வாறே செய்வாரா என்பது அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டுள்ளது.

வஜிர முன்பு சொன்ன சில கதைகள் பின்னர் உண்மையாகி விட்டன. இந்த வருட ஆரம்பத்தில் நடைபெறுவதாக கூறப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் இதுவரை நடைபெறவில்லை.

அதனால்தான் வஜிர மீண்டும் பணமில்லை என்ற இந்தக் கதையைக் கூறி மக்களைக் குழப்புகிறார், அல்லது உண்மையில் ஒட்டுக்குப் பணம் ஒதுக்கப்படுகிறதா என்பதை கவனத்தில் கொள்வது நல்லது - என்று கூறினார். (ஐ)

# ரூ. 3 கோடி மதிப்பிலான கொக்கெய்ன் போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

மன்னார், செப். 21

3 கோடி ரூபாய் பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருளை வைத்திருந்த ஒருவர் கடந்த திங்கட்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தாழ்வுபாடு பகுதியில் வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ 12 கிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டது. இந்தக் கொக்கெய்னின் சந்தை மதிப்பு சுமார் 3 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே சந்தேக நபர் கைதானார்.

கைதானவர் தாழ்வுபாடு பகுதியை சேர்ந்த 34 வயதான நபராவார். இவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)

# எல்ல பகுதிக்கு சுற்றுலா சென்ற 2 வெளிநாட்டு யுவதிகள் காயம்!

கொழும்பு, செப். 21

பண்டாரவளை , எல்ல பகுதிக்கு சுற்றுலா வந்த ஐரோப்பிய நாடான சுலோவேனியாவைச் சேர்ந்த இரு யுவதிகள், மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

23 வயதுகளுடைய இரு யுவதிகளே , எல்ல ரயில் நிலையத்துக்கு அருகாமையில் நேற்று முன்தினம் மாலை மோட்டார் சைக்கிளில் செல்கையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த இரண்டு பெண்களும் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு 1990 காவு வண்டி மூலம் பதுளை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

# கடல் ஆமைகளின் தொடர் உயிரிழப்பு தொடர்பில் ஆராயுமாறு கோரிக்கை!

## வனஜீவராசிகள் திணைக்களம் விடுத்தது

கொழும்பு, செப். 21

கடல் ஆமைகளின் உயிரிழப்புக்கு காரணமாக அமைந்த கடலுக்குள் ஏற்பட்ட வெடிப்புகள் தொடர்பில் ஆராயுமாறு கடல் சார் விடயங்களுக்கு பொறுப்பான தரப்பினருக்கு அறிவித்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாரா நிறுவனம், கடற்றொழில் திணைக்களம், கரையோர பாதுகாப்பு திணைக்களம், இலங்கை கடற்படை என்பவற்றுக்கே இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் கடற்கரை பகுதிகளில் கரையொதுங்கிய ஆமைகளின் உடல்களில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளில், அவற்றில் பெரும்பாலானவை கடலில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாகவே உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையான டைனமைட் எனப்படும் வெடிமருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது. எனினும், நாட்டின் மேற்கு கடற்பரப்பில் இவ்வாறான மீன்பிடி முறைகளின் பயன்பாடு குறைவாகவே காணப்படுவதாக வனஜீவ ராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த வெடிப்புகள் தொடர்பான நிச்சயமான தகவல்களை வெளிப்படுத்துவதன் மூலம் ஆமைகள் மட்டுமன்றி ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவது முக்கியமானது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் ஒரு மாத காலப் பகுதிக்குள், நாட்டின் மேற்கு, தெற்கு மற்றும் வடமேற்கு கடற்கரைகளில் சுமார் 40 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின. நெடுந்தீவு கடற்கரையிலும் உயிரிழந்த 2 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின என்று வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

# மாளிகாவத்தை துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 21

மாளிகாவத்தையில் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனியல் சிகிச்சை பெற்று வந்த நபர் 20 நாட்களின் பின் உயிரிழந்தார்.

கடந்த முதலாம் திகதி மாளிகாவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் குறித்த நபர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 38 வயதான மாளிகாவத்தை பிரதீப் என்பவராவார். இவர் குற்றச்செயல்களில் ஈடுபடும் குழு உறுப்பினர் என்பதுடன், போதைப்பொருள் கடத்தல்காரரான "பஞ்சிகாவத்தே நெவில்" என்பவரின் சகா என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தக் குற்றச் செயல் தொடர்பில் 20 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கொழும்பு குற்றப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

"கெசல்வத்த தினுக" குழுவால் பழிவாங்கும் நோக்குடன் இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ஐ)

# பசுமை அமைதி விருதுகள் வழங்குவது குறித்த அறிவித்தல்!

யாழ்ப்பாணம், செப். 21

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டுக்கான விருதுகளுக்கு விண்ணப்பம் மற்றும் பரிந்துரைகளை அந்த அமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பொருத்தமற்ற நிலப் பயன்பாடு, வளங்களின் அதீத சுரண்டல், கட்டுப்பாடற்று பெருகும் மாசுகள், விஸ்வரூபம் எடுத்துள்ள காலநிலை மாற்றம் ஆகியனவற்றின் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க முடியாமல் இயற்கை திண்டாடி வருகிறது. இந்நிலை நீடித்தால் விரைவிலேயே உலகம் பெரும் பிரளயத்துக்குள் தள்ளப்பட்டுவிடும் என்று சூழலியல் விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர்.

இயற்கையின் மீதான தாக்குதலை நிறுத்தி அதனுடன், ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாக செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மத்தியில் சூழற் கல்வி, சூழல் விழிப்புணர்வு மற்றும் சூழல் பாதுகாப்பு செயல்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கும் சிறந்த சூழல்நேயச் செயல்பாட்டாளர் ஒருவருக்கும் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

மாணவர்களுக்கான பசுமை அமைதி விருதுகள் - 2023, மாணவர்களிடையே பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணைய வழியில் நடாத்தப்படும், இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும், இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும், இலவசமாக நடைபெறவுள்ள இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் www. tamilnationalgreen.org இணையத்தளத் தின் ஊடாக 15.10.2023 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும், பரீட்சை இணையவழியூடாக 28.10.2023 (சனிக்கிழமை) இலங்கை நேரம் முன்னிரவு 7.00 மணி தொடங்கி 8.30 மணிவரை நடைபெறும், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும் இப்பரீட்சை 100 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். கடந்த கால வினாத்தாள்களை இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள், இவர்களிலிருந்து பெற்றுக் கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதழோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள், இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் பசுமை அமைதி விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் ஒரு பவுண் தங்க பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளி பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கல பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்.

இந்தப் பசுமை அமைதி விருதுகள் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும், சிறப்புப் பரிசுகளையும் விருதுகளையும் தீர்மானிப்பதற்குப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் ஒரு தொகுதி மாணவர்கள் தேவையேற்படின் இரண்டாவது சுற்றுப் பரீட்சைக்கும் தோற்ற நேரிடலாம், தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பரிசுகள் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் நடத்தப்படும் பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழாவில் வழங்கப்படும்.

சிறந்த சூழல்நேயச் செயல்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருது - சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல்நேயச் செயல்பாடுகளில் பல ஆண்டுகளாகத் தீவிரமாக உழைத்து வரும் தனிநபர் ஒருவர் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பரிந்துரையில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சூழல்நேய செயல்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதும் ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப் படுவார்.

இந்தப் பசுமை அமைதி விருது தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்த விருதாக வழங்கப்படும்.

சிறந்த சூழல் செயல்பாட்டாளர் ஒருவரை பரிந்துரை செய்ய விரும்புபவர்கள் அவர் பற்றிய விபரங்களைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், இல. 109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது greentamils5@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். பரிந்துரைகளை அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதி 31.10.2023.

# திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனிமூலம் தமிழ் - சிங்கள முரண்பாடு தோன்றும் நிலை!

## பாராளுமன்றில் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, செப். 21

திலீபனின் நினைவேந்தல் ஊர்தி பவனிக்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலும் ஊர்தி பவனி வருகிறது. இந்த சம்பவத்தின் ஊடாக தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடையில் முரண்பாடு தோற்றம் பெறும் நிலை காணப்படுகிறது. ஆகவே, அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் கேள்வி யெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில், "திலீபனின் நினைவேந்தல் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராக திலீபன் இருந்தாலும் அவர் அகிம்சை வழியில் போராடி இறுதியில் உயிர் தியாகம் செய்தார்.

திலீபனின் நினைவேந்தல் தற்போது பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. திலீபனின் உருவப்படத்தை சுமந்த வண்ணம் ஊர்தி பவனி மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கிச் செல்லும் போது தம்பலகாமம் பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளது. விடுதலை புலிகள் அமைப்பால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான சிங்களவர்கள் தம்பலகாமம் பகுதியில் வாழ்கிறார்கள்.

சிங்களவர்கள் அதிகளவில் வாழும் பகுதிக்கு செல்லாமல் இந்த ஊர்தி பேரணி திருகோணமலைக்கு சென்றிருக்கலாம். ஆனால், அவ்வாறு செல்லாமல் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் சிங்களவர்களின் கோபத்தைத் தூண்டி விடும் வகையில் இந்த பவனி சென்றுள்ளது. நான் சிங்களவர்களுக்கு ஆதரவாகவும், தமிழர்களுக்கு எதிராகவும் உரையாற்றவில்லை. திலீபனின் நினைவு ஊர்தி பவனிக்கு நீதி மன்றங்கள் தடை விதித்துள்ளன. இந்த பவனியால் தமிழ் - சிங்கள சமூகங்களுக்கு இடை யில் முரண்பாடுகள் தோற்றம் பெறும் நிலை காணப்படுகிறது.

அனுமதி பெறாத ஒரு பவனிக்கு பொலிஸார் எவ்வாறு அனுமதி வழங்கினார்கள் என்பது பிரச்னைக்குரியதாக உள்ளது. ஆகவே இந்த பிரச்னைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணவேண்டும். திலீபனின் நினைவேந்தல் பவனி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும். இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த இவ்விடயம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை அறிவிக்குமாறு வலியுறுத்துகிறேன் - என்றார். (ஐ)



## ஈழநாடு முகவர் காலமானார்!


யாழ்ப்பாணம், செப். 21

ஈழநாடு நாளிதழின் சித்தன் கேணி முகவரான செ. சு. தியாகராசா நேற்று புதன் கிழமை காலமானார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணியில் உள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

## முன்னணியினரை துரத்துவோம் எனக்கூறி மன்னாரில் சுவரொட்டி

மன்னார், செப். 21



தியாக தீபம் திலீபனின் நினைவூர்தி பவனி வருகிறது. இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் இந்தப் பவனிக்கு எதிர்ப்பு தெரிவித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை பரவலாக இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்ற பெயரில் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில், "தமிழீழத்திற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த மாவீரன் திலீபனின் தியாகத்தை விற்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை துரத்துவோம்", என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுவரொட்டி குறித்து பலரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். (ஐ)

## ஏ. ரி. எம். உடைக்கப்பட்டு 76 இலட்சம் ரூபாய் களவு!

கொழும்பு, செப். 21

கம்பஹா - நிட்டம்புவ நகரிலுள்ள தனியார் வங்கி ஒன்றின் ஏ. ரி. எம். இயந்திரம் உடைக்கப்பட்டு அதிலிருந்த சுமார் 76 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் நிட்டம்புவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

திங்கட்கிழமை வங்கி பணிகள் ஆரம்பமாகியதையடுத்து, இயந்திரத்தில் இடப்பட்டிருந்த பணத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வங்கி அதிகாரிகளுக்கு தெரிய வந்ததையடுத்து பணம் திருடப்பட்டமை கண்டறியப்பட்டது.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிட்டம்புவ பொலிஸார், வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உட்பட பல அதிகாரிகளிடம் வாக்குமூலங்களைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த விவரங்கள் இரண்டு நாட்களில் வெளியிடப்படும்!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, செப். 21

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான மேலதிக விவரங்களை இன்னும் இரண்டு நாட்களில் வெளியிடுவேன் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்துடன், ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்கு பொறுப்பான அரச அதிகாரிகள் சிலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

"ஏப்ரல் 21, 2019 அன்று நடந்த தற்கொலை தாக்குதல்களுக்கு தலைமை தாங்கிய சஹ்ரான் பற்றிய சில காணொலி காட்சிகள் எப்படி கசிந்தன என்பதையும் நான் ஆராய்வேன்," என்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பி . ஹெக்டர் அப்புஹாமி எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார்.



"இந்த காணொலி காட்சிகள் எவ்வாறு கசிந்தன என்பதை என்னால் தெளிவாகக் கூற முடியாது, ஆனால் நான் அதை ஆராய்ந்து சபைக்கு அறிவிப்பேன்," என்று அவர் கூறினார்.

அத்துடன், தாக்குதல்களுக்கு மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன பொறுப்பேற்க வேண்டுமென ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"ஜெயவர்த்தன குற்றவாளி என்று உச்ச நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டு இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது," என்று அவர் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிலந்த ஜெயவர்த்தன பொறுப்பேற்க வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்தும் வேளையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் பக்கம் 320 இல் நிலந்த ஜெயவர்த்தன பொறுப்பு என குறிப்பிடப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அப்புஹாமி தெரிவித்துள்ளார். ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான மேலதிக விவரங்களை இன்னும் இரண்டு நாட்களில் வெளியிடுவேன் என்று அமைச்சர் உறுதியளித்தார். (ஐ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறும் பெண்கள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 21

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நாட்டில் இருந்து வெளியேறுபவர்களில் ஆண்களின் வீதம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இந்நிலையில், தற்போது, வெளியேறும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக தரவுகள் மூலம் தெரிய வந்தது.

2000ஆம் ஆண்டில் வேலை வாய்ப்பு நிமித்தம் சவூதி, கட்டார் போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளுக்கு சென்றவர்களில் 67 வீதமானோர் பெண்களாகவும் 33 வீதமானோர் ஆண்களாகவும் காணப்பட்டுள்ளனர்.

2008 ஆம் ஆண்டு வரையில் வெளியேறுபவர்களில் அதிகளவானோர் பெண்களாக காணப்படுவதை தரவுகள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன. 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டை விட்டு வெளியேறுபவர்களில் அதிகளவானோர் ஆண்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து வேலைவாய்ப்பிற்காக நாட்டை விட்டு வெளியேறியோரில் ஆண்களின் வீதம் ஒருசில வருடங்களில் கூடிக் குறைந்தாலும் ஒட்டுமொத்த கணக்கெடுப்பின் அடிப்படையில் பெண்களை விட அதிக வீதத்தையே வெளிப்படுத்துகின்றது.

எவ்வாறாயினும் 2021 ஆம் ஆண்டில் நாட்டை விட்டு வெளியேறும் பெண்களின் வீதம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இதன் அடிப்படையில் 2022 ஆம் ஆண்டில் வேலை நிமித்தம் நாட்டை விட்டு வெளியேறியவர்களில் 40 வீதமானோர் பெண்கள் (கடந்த வருடத்தை விட 7 வீத அதிகரிப்பு) என பதிவாகியுள்ளது.

இவர்களில் 60 வீதமானோர் வீட்டு பராமரிப்பு உதவியாளர்களாவும் 30 வீதமானோர் குறைந்தளவு மூளையை பயன்படுத்த கூடிய தொழில்களுக்காகவும் 1.08 வீதமானோர் நடுத்தர தொழில்களுக்காகவும் வெளியேறி உள்ளனர் எனவும் 1.18 வீதமானோர் சிறந்த தொழில் தகைமை கொண்டவர்கள் எனவும் 5.5 வீதமானோர் நிபுணத்துவம் பெற்றவர்கள் எனவும் 2 வீதமானோர் அலுவலக பணிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் நாட்டை விட்டு வெளியேறிய ஆண்களின் வீதம் 2021 ஆம் ஆண்டில் 67 வீதமாக இருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டில் 60 வீதம் ஆக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அறகலயவின்போது பாதிக்கப்பட்ட எம். பிகளுக்கு ரூ. 141 கோடி இழப்பீடு!

கொழும்பு, செப். 21

**அறகலய போராட்டத்தின் போது சேதப்படுத்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் உடைமைகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டிய இழப்பீட்டு தொகை 141 கோடியே 40 இலட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது.**

31 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே 71 கோடியே 40 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜூலை 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் அன்றைய ஆளும் கட்சியைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், உடைமைகள் தீயிட்டு நாசமாக்கப்பட்டன.

இவ்வாறு சொத்துக்களை இழந்த உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்க உள்விவகார அமைச்சின் கீழ் உள்ள பாராளுமன்ற விவகாரப் பிரிவு நடவடிக்கை எடுத்தது. இதன்படி 31 உறுப்பினர்களுக்கு 71 கோடியே 40 இலட்சம் ரூபாய் நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 13 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 70 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது . இந்த மேலதிக ஏற்பாட்டை பெறுவதற்கான பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நட்டஈடு வழங்குவதற்கு மேலும் 20 கோடி ரூபாய் தேவைப்படும் என்று பாராளுமன்ற விவகார பிரிவு வலியுறுத்துகிறது.

இதேவேளை, போராட்டத்தின் போது சொத்துக்கள் அழிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக அல்லாத 73 உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் சிவில் பிரஜைகளுக்கு 51. கோடியே 90 இலட்சம் ரூபாய் நஷ்டஈடாக அரசாங்கம் வழங்கியுள்ளது.

அந்த நபர்களுக்கு இழப்பீடு வழங்குவது இழப்பீட்டு பணிமனையால் செய்யப்படுகிறது. அவர்களுக்கு வழங்க வேண்டிய மீதி இழப்பீடு எதிர்காலத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 1,500 ஆபாச காணொலிகளுடன் ராகமையில் இளம் பிக்கு கைது!

கொழும்பு, செப். 21

ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட நிர்வாண மற்றும் ஆபாச காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களை வைத்திருந்த 19 வயதான இளம் பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராகமையிலுள்ள விகாரை ஒன்றில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார். இந்தப் பிக்கு சிறுமிகளின் நிர்வாண படங்கள் மற்றும் ஆபாசப் படங்களை ஆபாச இணையத்தளங்களுக்கு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கணினி குற்றப் புலனாய்வு பிரிவால் கைது செய் யப்பட்டார்.

சந்தேக நபரிடம் 7 முதல் 18 வயது வரையான சிறுமிகளின் நிர்வாண படங்கள், காணொலிகள் இருந்தன. இதில், 80 சதவீதமானோர் 10 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டபோது, சந்தேக நபரிடமிருந்து மூன்று கணினிகள் மற்றும் 1,500 க்கும் மேற்பட்ட காணொலிகள் கைது செய்யப்பட்டனர்.

சமூக ஊடக குழுக்களில் சிறுமிகளின் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் பாலியல் காட்சிகள் பரவுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே கணினி குற்ற புலனாய்வு பிரிவின் சமூக ஊடக குற்ற புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். (ஐ)

# சிறுமியின் உடலத்தை தந்தால் 20 இலட்சம் ரூபாய் சன்மானம்!

## உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினர்

வவுனியா, செப். 21

மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் காணாமல் போன சிறுமியின் சடலத்தை மீள ஒப்படைத்தால் 20 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்று உயிரிழந்த சிறுமியின் அம்மம்மாவான குணரட்ணம் ரோகிணி தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அத்துடன் இது தொடர்பில் துண்டு பிரசுரம் ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டது.

மேலும், கடந்த ஒகஸ்ட் 25ஆம் திகதியன்று வவுனியா, பாரதிபுரம் பகுதியில் 2 வயது சிறுமி நீர்த் தொட்டியில் தவறி விழுந்து இறந்தார். இறந்த சிறுமியின் உடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இருப்பினும் கடந்த 5ஆம் திகதி சிறுமியின் உடல் இனந்தெரியாத நபர்களால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்டபான உண்மையான தகவல் வழங்குபவர்களுக்கு 10 இலட்சம் சன்மானமாக வழங்கப்படும். சிறுமியின் சடலத்தை எடுத்தவர்கள் மீள கையளிக்கின்ற போது 20 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும். இதனை தாழ்மையாக கேட்கின்றேன். எங்களுக்கு எங்கள் பிள்ளையின் உடலம் தேவை - என்றார்.

இதேவேளை, குறித்த சிறுமின் சடலத்தை காணவில்லை என நெளுக்குளம் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 6 அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சதொசவால் குறைப்பு

கொழும்பு, செப். 21

சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

அனைத்து சதொச நிறுவனங்களிலும் நேற்று புதன்கிழமை முதல் நடைமுறையாகும் வகையில் இந்த விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

சிவப்பு பருப்பு, பெரிய வெங்காயம், வெள்ளைப் பூண்டு, நெத்தலி, கிழங்கு மற்றும் சோயாமீட் ஆகியவற்றின் விலைகள் இவ்வாறு குறைக்கப்பட்டுள்ளன.

இதன்படி, சிவப்பு பருப்பு கிலோ ஒன்றின் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டு 299 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டு 195 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

வெள்ளைப்பூண்டு கிலோ ஒன்றின் விலை 25 ரூபாயால் குறைக்கப்பட்டு 620 ரூபாயாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நெத்தலியின் விலை 30 ரூபாயால் குறைக்கப்பட்டு 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், கிழங்கின் விலை 40 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதுடன், சோயாமீட்டின் விலை 45 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# முட்டை, கோழி இறைச்சியின் விலைகள் அதிகரிக்கப்படாது!

கொழும்பு, செப். 21

முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகளை எதிர்காலத்தில் அதிகரிப்பதற்கான எந்த திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கோவிட் -19 தொற்று நோயால் நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட அரசியல் ஸ்திரமற்ற தன்மையாலும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

இதனால் நாட்டில் ஏற்பட்ட முட்டை தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முட்டை இறக்குமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இறக்குமதியை தொடரும் திட்டம் எதுவும் இல்லை. அதற்கு பதிலாக உள்ளூர் முட்டை மற்றும் கோழி உற்பத்தியை அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

உள்ளூர் உற்பத்தியை ஆதரித்து அதிகரிப்பதன் மூலம், நாட்டிற்குள் முட்டை மற்றும் கோழியின் நிலையான விநியோகத்தை உறுதி செய்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். முட்டை விலையை சிலர் உயர்த்த முயற்சி நடப்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

ஆனால், விலைகளை அதிகரிக்க அரசாங்கம் அனுமதிக்காது. கோழி இறைச்சியின் விலையிலும் இதையே கடைப்பிடிக்கிறோம். கோழி இறைச்சியின் விலையையும் அதிகரிக்க விடமாட்டோம்.

சந்தையில் முட்டையின் விலையை உயர்த்துவதற்கான பல முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இருப்பினும், அத்தகைய விலை உயர்வுகளைத் தடுப்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். தொடர்ந்து நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து, நியாயமற்ற விலை உயர்வுகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது” என்றார்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்:

# மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும்!

## ரவூப் ஹக்கீம் எம். பி.

கொழும்பு, செப். 21

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக மறைக்கப்பட்ட உண்மைகள் உடன் வெளிக்கொண்டுவர வேண்டும் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட குழு கூட்டத்தின்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இதனை தெரிவித்தார்.

இந்தக் குழு கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவு அதிகாரிகள் என பலர் கலந்துக்கொண்டனர்.

இங்கு அவர் மேலும் கூறிய தாவது,

“உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளை முஸ்லிம் சமூகம் நினைவுகூருவதில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளை கண்டறிவதற்கான முதல் அடியை எடுத்து வைத்ததே முஸ்லிம் சமூகம்தான். இதன் உண்மை தன்மையை இந்த விசேட குழு அங்கீகரித்தமை மகிழ்ச்சியளிக்கிறது” என்றும் தெரிவித்தார். (ஐ)

## ரயில்வே திணைக்களம் மறுசீரமைப்பு:

# அமைச்சரவைக்கு இடைக்கால அறிக்கை ஒக்ரோபர் முற்பகுதியில்!

கொழும்பு, செப். 21

ரயில்வே திணைக்களத்தின் மறுசீரமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கை அடுத்த மாத முற்பகுதியில் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அதற்காக நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் செயல்பாட்டு நட்டத்தை ஈடுசெய்து சிறந்த சேவையை வழங்குவதற்கான முன்மொழிவுகளை இந்தக் குழு நேற்றுக் கூடி பரிசீலித்தது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரும் இந்த குழுவில் அங்கம் வகிப்பதாகவும் யோசனை தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கருத்துகள் உள்வாங்கப்படவுள்ளன என்று குழுவின் தலைவரும் துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருமான ருவன்சந்திர தெரிவித்துள்ளார். (ஐ)

# திலீபன் நினைவூர்தி சிங்கள பகுதிக்குள் சென்றதால் நல்லிணக்கம் பாதிக்கப்பட்டது

## கிழக்கு ஆளுநர் செந்தில் சொல்கிறார்

திருகோணமலை, செப். 21

திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் பாராளுமன்ற உறுப்பினரால் பொலிஸ் அனுமதி இன்றி சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவி சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது. நாட்டின் நல்லிணக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆளுநர் என்ற வகையில் எனக்கு உள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

திலீபனின் நினைவேந்தல் ஊர்வலம் பாராளுமன்ற உறுப்பினரால் பொலிஸ் அனுமதி இன்றி சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசத்தை ஊடுருவி சென்றது. இது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை இல்லாமல் ஆக்குகிறது.

தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதி கவனத்துடன் செயற்பட கூடிய பொறுப்பு உள்ளது. அந்தப் பொறுப்பில் அவதான குறைவாக செயல்படுவது நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைப்பதுடன் சட்ட ஒழுங்கும் பாதிப்படைகின்றது.

எதிர்காலத்தில் நாட்டின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் எந்த செயற்பாட்டை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது குறித்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)





# மட்டக்களப்பு கம்பஸ் படைகளால் விடுவிப்பு

**மட்டக்களப்பு, செப். 21**

**மட்டக்களப்பின் ஜெயந்தியாயவில் அமைந்துள்ள மட்டக்களப்பு கம்பஸ் நேற்று புதன்கிழமை இராணுவத்தால் விடுவிக்கப்பட்டது.**

பல வருடங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த இந்த பல்கலைக்கழகத்திலிருந்து இராணுவத்தினர் நேற்று வெளியேறியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று செவ்வாய்க்கிழமை முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்விடம் கம்பஸை பொறுப்பேற்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதற்கமைய முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் நேரடியாக சென்று கம்பஸை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கம்பஸை பொறுப்பேற்கும் நிகழ்வில் கல்குடா அல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் எம். எம். ஹாரூன் ஸஹ்வி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம். தாஹீர், மௌலவி மும்தாஸ் மதனி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# ஹெரோயின் கடத்திய இளைஞர் காத்தான்குடி பொலிஸாரால் கைது!

காத்தான்குடி, செப். 21

காத்தான்குடி பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திய இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்ததாக காத்தான்குடி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி முதியோர் இல்ல வீதியில் நடத்திய திடீர் சுற்றி வளைப்பு தேடுதலின் போதே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 2 கிராம் மற்றும் 210 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# மோட்டார் சைக்கிள் விபத்து; சமுர்த்தி உத்தியோகத்தர் பலி!

திருகோணமலை, செப். 21

வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார் என்று மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து பன்குளத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் குமரன் கடவை - கரக்கஹவெவ பகுதியைச் சேர்ந்த 53 வயதான அணில் சதுரசிங்க என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

குமரன்கடவை பிரதேச செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் இவர் திருகோணமலைக்கு வந்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்துள்ளார். பன்குளம் - 4ம் கண்டம் பகுதியில் யானை வீதியை கடந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த அவர் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார்.

மஹதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரியவந்தது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



அகில இலங்கை தமிழ் தின போட்டி:

# சிந்து நடை போட்டியில் வாகரை ம. வி. முதலிடம்

மட்டக்களப்பு, செப். 21

அகில இலங்கை தமிழ் தினப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பிடித்தது.

அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் மாவட்ட மட்ட போட்டிகள் வந்தாறுமூலை மகா வித்தியாலயத்தில் கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அதிகாரிகளின் வழிகாட்டலின் கீழ் கடந்த சனிக்கிழமை நல்லையா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பட்டிருப்பு, மட்டக்களப்பு மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயத்தை சேர்ந்த கல்வி அதிகாரிகள் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டு சிறப்பித்திருந்த இந்த நிகழ்வில் பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தன.

இதில், சிந்துநடை கூத்து போட்டியில் முதன்முறையாக வாகரை மகா வித்தியாலயம் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பிடித்தது. (ஐ)

# போதைப் பொருள் தொடர்பில் விழிப்புணர்வு வீதி நாடகம்!

திருகோணமலை, செப். 21

போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு வீதி நாடகம் திருகோணமலை - தம்பலகமம் குளக்கோட்டன் வித்தியாலத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

போதைவஸ்து பாவனையால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து மாணவர்களுக்கு விழிப்பூட்டும் வகையில் இந்த நாடகம் அமைந்திருந்தது.

இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



# அம்பாறையில் வெள்ளம்; மக்கள் பெரும் சிரமம்!

கல்முனை, செப். 21

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், நாவிதன்வெளி, சம்மாந்துறை பிரதேசங்களின் மக்கள் வெள்ளப் பெருக்கால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடும் மழையால் பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வீடுகளுக்குள்ளும் வெள்ளம் உட்புகும் நிலை ஏற்பட்டுள்ளது. மழை நீர் வழிந்தோடுவதற்கான வடிகால் முறைமை சீராக இன்மையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளில் வசிக்கின்ற சில மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் ஒழுங்கான வீடமைப்பு, சீரான வீதிகள் இல்லை. அத்துடன், மின்சாரமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# 100 ஆண்டுகளின் முன்பு அழிந்துபோன தஸ்மானியன் புலி மீண்டும் வருகிறது!

சிட்னி, செப். 21

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு அழிந்துபோன தஸ்மானியன் புலி என்ற விலங்கை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக மெல்பர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தைலசின் என்று அழைக்கப்படும் தஸ்மானயன் புலி இனம் கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்பு காலநிலை மாற்றம், வேட்டையாடுதல் உள்ளிட்ட காரணங்களால் ஆஸ்திரேலியாவின் தஸ்மானியா தீவைத் தவிர உலகின் மற்ற பகுதிகளில் இருந்து அழிந்து போனது. ஐரோப்பிய குடியேற்றத்திற்கு முன்பு சுமார் 5,000 தஸ்மானிய புலிகள் தஸ்மானிய காடுகளில் இருந்ததாக கூறப்படும் நிலையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கால்நடைகளுக்கு அச்சுறுத்தலாக கருதி, அவை தொடர்ந்து வேட்டையாடப்பட்டன. உலகின் கடைசி தஸ்மானியன் புலி, தஸ்மானியாவில் உள்ள ஹோபர்ட் விலங்கியல் பூங்காவில் 1936ஆம் ஆண்டு மடிந்தது. அந்த புலியின் பெயர் பெஞ்சமின்.

அதன் பிறகு நீண்டகாலமாக தஸ்மானியன் புலி இனத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் முயற்சியில் ஆய்வாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தற் போது பண்டைய மரபணு மீட்டெடுப்பு மற்றும் செயற்கை இனப்பெருக்கம் ஆகியவற்றின் முன்னேற்றங் களைப் பயன்படுத்தி அழிந்துபோன இந்த விலங்கை மீண்டும் கொண்டு வர மெல்போர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் முயன்று வருகின்றனர். மாமிச உண்ணிகளை உயிர்ப்பிக்க உதவும் ஆர்என்ஏ மாதிரியை மீட்டெடுத்ததால், டாஸ்மேனிய புலியை மீண்டும் பூமியில் நடமாட செய்ய முடியும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.



ரிபோநியூக்ளிக் அமிலம் (ஆர்என்ஏ) என்பது அனைத்து உயிரணுக்களிலும் உள்ள ஒரு மரபியல் பொருளாகும். இது டிஎன்ஏக்கு நிகரான கட்டமைப்பு ஒற்றுமைகளைக் கொண்டது. ஸ்வீடனில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் 1891 ஆண்டு முதல் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு தஸ்மானியன் புலியின் உடலிலிருந்து இந்த ஆர்என்ஏவை ஆய்வாளர்கள் மீட்டெடுத்துள்ளனர்.

தஸ்மானியன் புலிக்கு உயிர்கொடுக்கும் இந்த முயற்சி, அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை தலைமையிடமாகக் கொண்ட கொலோசல் பயோச யின்சஸ் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப் படுகிறது. மேலும் இந்த திட்டத்துக்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. உடலில் புலியைப் போல வரிகளைக் கொண்டதால் அதற்கு தஸ்மானியன் புலி என்று பெயரிடப்பட்டது. மாறாக அது பார்ப்பதற்கு ஓநாயின் தோற்றத்தை கொண்டிருந்தது. (ஐ)



# லிபியாவில் உக்ரைன் விசேட படை தாக்குதல்!

திரிபோலி, செப்.21

சூடானில் வோக்னர் ஆதரவு படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் உக்ரைனின் விசேட படையணியினர் உள்ளனர் என சி. என். என். தெரிவித்துள்ளது.

சூடான் தலைநகருக்கு அருகில் வோக்னர் ஆதரவு படையினரின் நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆளில்லா விமான தாக்குதல் மற்றும் தரைநடவடிக்கைகளின் பின்னணியில் சூடானின் விசேட படையினர் உள்ளனர் என்பது சி. என். என்னின் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலின் விளைவுகள் போர்முனையிலிருந்து பல மைல்களுக்கு அப்பால்வரை காணப்படுவதும் தெரியவந்துள்ளது.

சூடானில் இடம்பெறும் தாக்குதல்களை சூடான் இராணுவத்தினர் இல்லாத தரப்பின் செயற்பாடுகள் என உக்ரைன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் இந்த தாக்குதலின் பின்னணியில் உள்ளதா என சிஎன்என் மேலும் கேள்வி எழுப்பியவேளை அவர் சூடான் தலைநகரில் இடம்பெறும் தாக்குதலிற்கு உக்ரைன் விசேடபடையணிகள் காரணமாகயிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்

சூடானின் ஆர்எஸ்எவ் ஆயுதக்குழுவை இலக்கு வைத்து பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன- ஆர்எஸ்எவ் குழு வாக்னர் குழுவிடமிருந்து உதவிகளை பெறுகின்றது என சர்வதேச சமூகம் நம்புகின்றது.

உக்ரைனின் தாக்குதல்களை சிஎன்என்னால் உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் கிடைத்துள்ள வீடியோக்களில் உக்ரைனின் ஆளில்லா விமான தாக்குதல் பாணி காணப்படுவதாக சிஎன்என் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் பரவலாக காணப்படும் இரண்டு ஆளில்லா விமானங்கள் போன்ற ஆளில்லா விமானங்கள் லிபியாவில் எட்டு விமானதாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.ஆளில்லா விமானங்களில் உக்ரைன் மொழி காணப்படுகின்றது.

மேலும் ஆளில்லா விமானங்கள் இலக்கை குறி வைத்து மேற்கொள்ளும் தாக்குதல் பாணி ஆபிரிக்காவிற்கு புதியது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சூடான் மீதான உக்ரைனின் இரகசிய தாக்குதல்கள் மொஸ்கோவிற்கு எதிரான அதன் தாக்குதல்களில் பாரிய - விளைவுகளை ஏற்படுத்தும் விஸ்தரிப்பை குறித்து நிற்கின்றன.

ரஷ்யாவின் தொலைதூர பகுதிகளுக்குள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கு அப்பால் ரஷ்யா ஆக்கிரமித்துள்ள தனது நாட்டின் கிழக்கு தெற்கிலும் உக்ரைன் ஆளில்லா விமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

லிபியாவில் இடம்பெற்ற ஆளில்லாவிமான தாக்குதல்களிற்கு உக்ரைன் இதுவரை உரிமை கோரவில்லை - எனினும் இது குறித்த காணொலிகள் வெளியாகியுள்ளன - சமூக ஊடகங்களில் அவற்றை காணக்கூடியதாகவுள்ளது. (ஐ)

# காலிஸ்தான் அமைப்பை சேர்ந்தவர் கொலை; இந்திய அதிகாரியை வெளியேற்றியது கனடா!

புதுடில்லி, செப். 21

காலிஸ்தான் அமைப்பை சேர்ந்தவர் கொலையான விவகாரத்தில் இந்திய தூதரக அதிகாரி ஒருவரை கனடா அரசு வெளியேறும்படி உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் அமைப்பினர் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவில் உள்ள இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் அமைப்பினரின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் புகைப்படங்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.



இந்நிலையில் பாராளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன. " என்று கூறினார். இதனை இந்தியா அபத்தமானது என்றும் உள்நோக்கம் கொண் டது என்றும் தெரிவித்துள்ளது.

பிரதமரின் பேச்சைத் தொடர்ந்து, பேசிய வெளியுறவு அமைச்சர், "இன்று (நேற்று) நாங்கள் இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரிகையை நாட்டில் இருந்து வெளியேற்றியுள்ளோம். அவர் இந்தியாவின் வெளிநாட்டு புலனாய்வு அமைப்பின், ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவின் தலைவராக செயல்பட்டவர்" - என்றார். (ஐ)

# இந்தியா நிலவை எட்டிவிட்டது நாம் கையேந்தும் நிலையில்!

## பாக். முன்னாள் பிரதமர்

லாகூர், செப். 21

இந்தியா நிலவை அடைந்துவிட்ட சூழலில், உலக நாடுகளிடம் பாகிஸ்தான் கையேந்திக் கொண்டிருக்கிறது என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.



லாகூரில் நடைபெற்ற பாகிஸ்தான் முஸ்லீம் லீக்-நவாஸ் கட்சியின் பொதுக்கூட்டத்தில் வீடியோ கான் பரன்சிங் மூலம் உரையாற்றியபோது இதனை தெரிவித்தார் நவாஸ் ஷெரீப்.

மேலும் அவர், "இந்தியா நிலவை அடைந்துவிட்டது, ஜி-20 கூட்டங் களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அதேநேரத் தில், பாகிஸ்தான் பிரதமர் நாடு, நாடாகச் சென்று நிதிக்காக கையேந்திக் கொண்டிருக்கிறார்.

இந்தியா செய்த சாதனைகளைப் பாகிஸ்தானால் ஏன் செய்ய முடியவில்லை. இதற்கெல்லாம் இங்கு யார் பொறுப்பு" என்று கேள்வி எழுப்பினார். தொடர்ந்து பேசுகையில், "அடல் பிஹாரி வாஜ்பாய் இந்தியாவின் பிரதமரானபோது, இந்தியாவிடம் பில்லியன் டாலர் மட்டுமே இருந்தது. தற்போது இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 600 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இந்தியா இன்றைக்கு எங்கேயோ சென்றுவிட்டது. ஆனால், பாகிஸ்தான் உலக நாடுகளிடம் நிதிக்காக கையேந்திக் கொண்டிருக்கிறது" என்று பேசினார்.

2019இல், அல்அஜிசியா மில் ஊழல் வழக்கில் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று தற்போது மருத்துவக் காரணங்களுக்காக லண்டனில் இருக்கும் நவாஸ் ஷெரீப் வரும் ஒக்ரோபர் 21ஆம் திகதி நாடு திரும்புவதாக அறிவித்துள்ளார். பாகிஸ்தானில் நவம்பர் 6ஆம் திகதியை பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாடு திரும்புவதாக அறிவித்துள்ளார் நவாஸ் ஷெரீப். (ஐ)

# 10 பேரில் ஒருவர் 80 வயதானவர் புதிய சிக்கலில் ஜப்பான் நாடு!

ரோக்கியோ, செப். 21

கிழக்காசியாவில் உள்ள தீவு நாடு ஜப்பான். அந் நாடு ஒரு புதுவிதமான சிக்கலை எதிர்கொண்டு வரு கிறது. ஜப்பானின் தேசிய தகவல் தரவின்படி அந் நாட்டு மக்கள் தொகையில் 29.1வீதம் பேர் 65 அல் லது அதற்கு மேற்பட்ட வயதினராக உள்ளனர். இந்நிலை இப்படியே நீடித்தால், 2040 வருட காலகட் டங்களில் இது 34.8 சதவீதம் எனும் நிலையை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

24.5 சதவீதத்துடன் இத்தாலியும், 23.5 சதவீதத்துடன் பின்லாந்தும் அடுத்தடுத்த நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. முதல்முறையாக ஜப்பானில் 10 பேரில் ஒருவர் 80 வயது நிரம்பியவராக இருப்பது தெரிய வந்துள்ளது.

உலகிலேயே பிறப்பு விகிதம் குறைவான நாடுகளில் ஜப்பானும் ஒன்று. நாட்டில் பணியில் உள்ள குடிமக்களில் 65 வயதை கடந்தவர்கள் 13 சதவீதத்திற்கும் மேலே இருப்பதால் பொருளாதாரத்திலும், அதிகரிக்கும் நாட்டின் சமூக பாதுகாப்பிற்கான செலவினங்களிலும் இதன் தாக்கம் கடுமையாக உள்ளது.

1970 காலகட்டங்களில் 20 இலட்சமாக இருந்த குழந்தை பிறப்பு அந்நாட்டில் கடந்த வருட தரவுகளின்படி 8 இலட்சத்திற்கும் குறைவான நிலையை எட்டியுள்ளது. ஜப்பானிய நிறுவன பணியிடங்களில் ஊழியர்களுக்கான வேலை பார்க்கும் நேரம் மிக அதிகம். மேலும், அந்நாட்டில் வாழ்வதற்கான செலவினங்கள் மிக அதிகம். இக்காரணங்களால் தம்பதிகள் குழந்தை பெற்று கொள்வதை அரசாங்கம் ஊக்குவித்தாலும், மக்கள் தயங்குகிறார்கள்.

ஒரு கட்டமைப்புள்ள சமூகமாக இயங்கும் ஆற்றலை ஜப்பான் இழந்து வருவதாக அந்நாட்டின் பிரத மர் ஃப்யுமியோ கிஷிடா கடந்த ஜனவரியில் தெரிவித் தார். இச்சிக்கலை விரைவாக சரி செய்யும் நடவடிக் கைகளை அந்நாடு எடுக்க வேண்டும் என மனிதவள மேலாண்மை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# அஸ்வெசும பயனாளிகளுக்கு ரூ. 727 கோடி வைப்பிடப்பட்டது

கொழும்பு, செப். 21

**அஸ்வெசும பயனாளிகளுக்கு நலன்புரி கொடுப்பனவுகளாக 727 கோடியே 80 இலட்சம் ரூபாயை அரசாங்கம் வழங்கியுள்ளது. அதன்படி 11 இலட்சத்து 62 ஆயிரத்து 245 பயனாளிகளுக்கு ஜூலை மாதத்துக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.**

மேலும் ஜூலை மாதத்துக்கான அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 79 கோடியே 95 இலட்சம் ரூபாய் அரசாங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மேலும் ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 713 பயனாளிகள் நலன்புரி கொடுப்பனவுகளை பெறவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவுகள் இன்றைய தினம் பயனாளிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். மீதமுள்ள பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளை நலன்புரி நன்மைகள் சபை கணக்குகளை சரி பார்த்த பின்னர் செலுத்தவுள்ளது.

ஜூலை மாதத்துக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட பின்னர் அனைத்து பயனாளிகளுக்கும் ஓகஸ்ட் மாதத்துக்கான கொடுப்பனவுகளை ஒரே நேரத்தில் வழங்க முடியும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# ஒரு கிலோ ஹஷிஸ் போதை சுங்கப் பிரிவிடம் பிடிபட்டது!

கொழும்பு, செப். 21

பெல்ஜியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன் ஒன்றில் இருந்து ஒரு கோடியே 64 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஹஷிஸ் போதைப்பொருள் அடங்கிய பொதி சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஒருகொடவத்தையிலுள்ள கொள்கலன் முனையத்தில் இந்த போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

சிலாபம் - வென்னப்புவ பகுதியிலுள்ள முகவரியொன்றுக்கு அனுப்பப்பட்டிருந்த குறித்த பொதியில் ஒரு கிலோ 98 கிராம் ஹஷிஸ் போதைப் பொருள் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொதியில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரி போலியானது என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலீ அருக்கொட தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட ஹஷிஸ் போதைப்பொருள், மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுவரில் சிறுநீர் கழிப்பதை தடுத்ததால் ரயில்வே ஊழியர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, செப். 21

ரயில் நிலைய சுவரில் சிறுநீர் கழிக்க முயன்றவர்களை தடுத்த ஊழியர்கள் தாக்கப்பட்டனர். அத்துடன், ரயில் நிலைய சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

களுத்துறை தெற்கு ரயில் நிலையத்தில் ஒரு குழுவினர் நிலைய அதிபர் மற்றும் ஊழியர்களை கற்களால் தாக்கி சொத்துகளுக்கும் சேதம் விளைவித்தனர் என்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில் நிலைய பொறுப்பதிகாரி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் மதுபோதையில் வந்த சிலர் ரயில் நிலைய சுவரில் சிறுநீர் கழிக்க முற்பட்ட போது அதற்கு ரயில்வே ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்ததே மோதலுக்கு காரணம் என்று கூறப்பட்டது.

இந்தக் குழுவினர் கற்களை வீசி மூன்று பூந்தொட்டிகள் மற்றும் பயணிகள் இருக்கைகளை சேதப்படுத்தினர் என்று ரயில்வே ஊழியர்கள் கூறுகின்றனர்.

தலைமையக பொலிஸ் பரிசோதகர் ருவன் விஜேசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ)

# ஜனாதிபதி ரணில் நேபாள பிரதமரை நியூயோர்க்கில் நேற்று சந்தித்து பேச்சு

நியூயோர்க், செப். 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று புதன் கிழமை நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.



இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால அரசியல், பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து இதன் போது இரு நாட்டுத் தலைவர்களும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை - நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வு, அதற்கான மிக முக்கியமான நடவடிக்கையாக அமையும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் எதிர்காலத்தில் வலுவாக முன்னேறும் என நம்பிக்கை தெரிவித்த நேபாள பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நேபாள மக்களுக்கு இடையில் சமய மற்றும் கலாசார ரீதியில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படுவதாகவும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதற்கு இது ஒரு சிறந்த காரணியாக அமையும் என்பதை இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம், தனி மனிதர்களுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்துவது மற்றும் சுற்றுலாத் துறையில் உறவுகளை மேம்படுத்து குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பல தரப்பு விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட இலங்கை மற்றும் நேபாளத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (ஐ)

# நாட்டுக்கு வரும் முதலீடுகளில் கவனம் செலுத்தவேண்டும்!

## சம்பிக்க எம். பி. அறிவுரை

கொழும்பு, செப். 21

இலங்கை வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. ஆகவே, நாட்டுக்கு வரும் முதலீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். கொழும்பு துறைமுக நகரத்தில் பெட்டிக்கடைகளை அமைக்காமல் ஆரம்பத்தில் வகுத்த திட்டங்களை மாற்றமில்லாமல் செயல்படுத்த வேண்டும்.

கொழும்பு துறைமுக நகரத்துக்கு சீனா மாத்திரம் முதலிடவில்லை. இலங்கையும் அதிகநிதியை முதலிட்டுள்ளது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் தொழில்நுட்ப ரீதியில் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான உண்மை, பொய் ஆகியவற்றை நாட்டு மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். 2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசாங்கம்" மீண்டெழும் இலங்கை" தொடர்பான கொள்கைக்கு அமைவாகவே துறைமுக நகரம் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள அவசியமற்ற முனையங்கள்,கட்டிடங்கள் ஆகியவற்றை நீக்கி துறைமுகத்துக்குள் துறைமுக நகரத்தை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் யோசனை முன்வைக்கப்பட்டது. தெற்கு துறைமுக அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தெற்கு கடற் பகுதியில் இருந்து வடக்கு கடற் பகுதிக்கு மணல் இழுத்துச் செல்லும் வேகம் அதிகளவில் காணப்படுவதால் கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் மணல் மேடுகள் தோற்றம் பெறும் சூழல் காணப்படுவதாக தேசிய ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டதை தொடர்ந்து துறைமுகத்துக்கு அப்பாற்பட்ட வகையில் கொழும்பு துறைமுக நகரம் உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2014ஆம் ஆண்டு இறுதி காலாண்டு பகுதியில் கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.அபிவிருத்தி பணிகள் தொடர்ந்ததன் பின்னர் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இவ்வறான பின்னணியில் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட குழுவை நியமித்தார்.

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி பணிகளை துறைமுக அதிகார சபை முன்னெடுக்க முடியாது என அந்த குழு அறிக்கை சமர்ப்பித்ததை தொடர்ந்து துறைமுக நகர நிர்மாண பணிகள் தொடர்பான அதிகாரங்கள் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு பொறுப்பாக்கப்பட்டது. எமது அமைச்சின் கீழ் அதிகாரங்கள் கிடைக்கப் பெற்றவுடன் 2014 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் முழுமையாக மறுசீரமைக்கப்பட்டன.

கொழும்பு துறைமுகத்தின் ஏகபோக உரிமை 2014 ஆம் ஆண்டு சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது.இந்த நிலையை மாற்றி கொழும்பு துறைமுக நகரத்தின் முழு உரிமையையும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பொறுப்பாக்கி நாட்டின் இறையாண்மையை நல்லாட்சி அரசாங்கம் பாதுகாத்தது என்பதை பகிரங்கமாக குறிப்பிட முடியும்.

முறையாக சுற்றாடல் தரப்படுத்தல் ஏதும் இல்லாமல் தான் 2014 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுக நகரத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சுற்றாடல் தொடர்பில் தரப்படுத்தலை மேற்கொண்டு நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தோம்.முறையான சுற்றாடல் தரப்படுத்தலை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு கட்டிடம் உட்பட கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியில் உள்ள பாரம்பரியமான கட்டடங்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கும்.

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 4 பிரதான முதலீட்டாளர்களை கொழும்பு துறைமுக நகரத்துக்கு கொண்டு வர உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தோம். 52 நாள் அரசியல் நெருக்கடி, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் ஆகிய சம்பவங்களினால் அனைத்து முயற்சிகளும் பலவீனப்படுத்தப்பட்டன. அதனை தொடர்ந்து 2019ஆம் ஆண்டு துரதிர்ஷ்டவசமாக நாட்டை காக்க கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

இலங்கை வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. ஆகவே, நாட்டுக்கு வரும் முதலீடுகள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும். கொழும்பு துறைமுக நகரத்தில் பெட்டிக் கடைகளை அமைக்காமல் ஆரம்பத்தில் வகுத்த திட்டங்களை மாற்றமில்லாமல் செயல்படுத்த வேண்டும். கொழும்பு துறைமுக நகரத்துக்கு சீனா மாத்திரம் முதலிடவில்லை. இலங்கையும் அதிகம் நிதியை முதலிட்டுள்ளது. ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் தொழில்நுட்ப ரீதியில் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட வேண்டும்- என்றார். (ஐ)

## ரணிலுக்கு...

இனப்படுகொலையாளிகளான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, மகிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதிகள், புலனாய்வாளர்கள் உட்பட அனைவரையும் பாதுகாப்பதற்காக பதவியும் வழங்கி தொடர்ந்து காப்பாற்றி வருகின்றார்.

ரணில் பௌத்த மயமாக்கல், சிங்களக் குடியேற்றத்தை தீவிரமாக செயற்படுத்தும் ரணிலை அமெரிக்காவில் விரட்டியடிப்போம். அம்பலப் படுத்துவோம்.

அமெரிக்கா,கனடா வாழ் தமிழர்கள் தங்கள் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உரிமையுடன் உங்கள் அனைவர்க்கும் அழைப்பு விடுக்கின்றது.

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவு ஊர்தியை அடித்து நொருக்குமாறும் , தமிழர்களை அடித்து கொல்லுமாறும் ,உத்தரவு பிறப்பித்த ரணில் அமெரிக்காவில் வந்து சொற்பொழிவாற்றுவதை நாம் வேடிக்கைபார்ப்பதா? தமிழர்களே நியுயோர்க் ஐ.நா முன்றில் அணிதிரள்வோம் ரணிலுக்கு தமிழர்களின் எதிர்ப்பையும், உலகிற்கு உண்மையையும் எடுத்துரைப்போம்-என்றுள்ளது. (அ)

## மின்சார...

தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 70 வீத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி அந்த இலக்கை அடைய தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்கலங்களின் ஊடாக 685 மெகாவோர்ட் , நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களினால் 140 மெகாவோட் ,காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவோர்ட், சிறிய நீர் மின் நிலையங்களினால் 434 மெகாவோர்ட் மற்றும் பாரிய நீர்மின் நிலையங்களின் ஊடாக 1573 மெகாவோர்ட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்கப்படுகின்றன.

மேலும், சூரிய சக்தி மின்நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்க தேவையான இடங்களை அடையாளம் காணும் பணியை நிலைபெறு தகு வலு அதிகாரசபை ஆரம்பித்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை இணைப்பதில் ஏற்படும் உறுதியற்ற தன்மையை சமாளிக்க இந்தியாவின் ஊடாக தெற்காசிய மின்சாரக் கட்ட மைப்புடன் அதனை இணைக்கத் தேவை யான ஆரம்பகட்டச் செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டில் எரிசக்தியை மேம்படுத்த சிறந்த திட்டம் தேவை. அதற்காக 2023 முதல் 2026 வரை ஒரு திட்டத்தையும், 2027 முதல் 2030 வரை அதன் தொடரான திட்டமொன்றையும் மின்சார சபை தயாரித்துள்ளது. அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப உரிய திட்டங்களை மாற்றி நாட்டுக்குத் தேவை யான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

உமா ஓயா திட்டப் பணிகள் பல்வேறு காரணங்களால் தாமதமாகி வருகின்றன. ஆனால் தற்போது அதன் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளது. எனவே, அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அடுத்த மாதத்திற்குள் பிரதான மின்கட்டமைப்பில் சேர்க்கப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, அணுசக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது. இதற்கு காலம் பிடிக்கும். ஆனால் அதற்கான சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் - என்றார். (அ)

## ஈஸ்டர்...

நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் சமூகத்தில் நிலவிய பல குற்றச்சாட்டுகளுக்கு தீர்வை தந்துள்ளது.

பாராளுமன்றத்தில் இது தொடர்பான விவாதத்தில் மிகக் கடுமையாகப் பேசுவேன். பலரது குற்றச்சாட்டுகளுக்கு இதில் தீர்வு கிடைக்கும்.

சனல் 4 ஆவணப்படம் மற்றும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர் பில் சர்வதேச விசாரணை நடத்துமாறு கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்திடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளேன் -என்றார். (அ)

## யாழ்.ஆதார...

உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கத் தின் மெத்தன போக்கை கண்டித்து, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் நாடளாவிய ரீதியில் கவன ஈர்ப்பு போராட்டங்கள் நடத்தப் பட்டு வருகின்றன.

இதன்படி, கடந்த 12ஆம் திகதி யாழ். மாவட்டம் தவிர்ந்த வட மாகாணத்தில் உள்ள ஏனைய 4 மாவட்டங்களிலும் கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன.

இந்த நிலையில், யாழ். மாவட்டத்திலுள்ள ஆதார வைத்திய சாலைகளான சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை வைத்தியசாலைகளில் நேற்று நண்பகல் 11:30 மணியிலிருந்து 1 மணி வரையிலும் போராட்டம் நடந்தது.

இன்று நண்பகல் 11.30 மணியிலிருந்து 1 மணி வரையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (அ-2)

## நாகபட்டினம்...

காங்கேசன்துறை துறை முகத்துக்கு கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல்சார் சபை, மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை மற்றும் வெளியுறவுத் துறை மற்றும் தமிழக அரசு இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன.

நாகபட்டினம் துறைமுக கால்வாய் தூர்வாருதல், பயணியர் முனையம் அமைப்பது போன்ற பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய கப்பல் போக்குவரத்து கழகம் விரைவு பயணியர் கப்பல் போக்குவரத்தை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

பயணியர் கப்பல் பயணம், வெளி நாட்டு பயணம் என்பதால் மத்திய அரசின் தொழிற்துறை பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் கையாள வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாகபட்டினம் துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகள் எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதிக்குள் நிறைவு பெற்று, ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்குள் மத்திய அரசு அனுமதியுடன் நாகபட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு கப்பல் போக்குவரத்து தொடங்க வாய்ப்புள்ளது - என்றார்.

மேலும், வரலாற்று சிறப்புமிக்க கப்பல் போக்குவரத்தால் இலங்கை மற்றும் தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சி பெறுவதுடன் இரு நாட்டிற்கு இடையே நல்லுறவு ஏற்படும் என்றும் கூறினார். (ஐ)

# கிழக்கு ஆளுநருக்கு முதுகெலும்பில்லை!

### சபையில் வேலுகுமார் சாடல்

கொழும்பு, செப். 21

"அகிம்சைவாதியான திலீபனை நினைவுகூருவது சட்டவிரோதமென - கோழைத்தனமாக அறிக்கை விடுத்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர், அந்த அறிவிப்பை உடன் மீளப்பெற வேண்டும்." - என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வேலுகுமார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

அகிம்சை வழியில் போராடி உயிர் தியாகம் செய்த திலீபனை நினைவுகூர்ந்து வாகன பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பங்கேற்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை தடுக்காமல் பொலிஸார் செயற்படும் விதத்தையும் காணொளிகளில் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் அரசின் பிரதிநிதியாக இருக்கக்கூடிய கிழக்கு மாகாண ஆளுநர், செந்தில் தொண்டமானின் செயற்பாட்டு கண்டிக்கத்தக்கது. கோழைத்தனமாக அறிக்கை விட்டுள்ளார். ஒரு அகிம்சைவாதியை நினைவுகூர்ந்த பாராளுமன்ற உறுப்பினர், வழிமறிக்கப்பட்டு மிலேச்சத்தனமாக தாக்கப் பட்டுள்ள நிலையில், அதற்கு கண்டனம் தெரிவிக்க அவருக்கு முதுகெலும்பில்லை. மாறாக நினைவேந்தலை சட்டவிரோதம் எனக்கூறி கோழைத்தனமாக அறிவிக்கை விடுத்துள்ளார். ஆளுநரின் செயலை கண்டிக்கின்றோம். அந்த கூற்றை அவர் மீளப்பெற வேண்டும்-என்றார். (அ)

## திலீபனின்..

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த வழக்கை யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ. ஆனந்த ராஜா வழக்கை தள்ளுபடி செய்தார். (அ)

## அரசாங்கத்துக்கு...

தேசிய விரோத தினமாக 22ஆம் திகதியை நாம் பிரகடனப்படுத்துவதுடன், அனைத்து வைத்தியசாலைகள் முன்னிலையிலும் இந்தப் போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு இதுதொடர்பில் விளக்கமளித்துள்ளோம். நாட்டின் சுகாதாரத்துறையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் தான் நன்கு அறிந்துள்ளதாக அவர் கூறியதுடன், எமது போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் பாதுகாக்கும் நோக்கில் போராட்டங்களை நடத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என நாட்டு மக்களுக்குத் தெரியும். அவற்றுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக சுகாதார கட்டமைப்பில் உள்ள பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினோம். ஆனால், மக்களின் சுகாதாரம் தொடர்பில் அவர்களுக்கு துளியளவும் அக்கறையில்லை.

அரசியல்வாதிகளுக்கு இந்த வைத்தியசாலை கட்டமைப்பு அவசியமில்லாவிடினும் நாட்டு மக்களுக்கும் இது அவசியமாகும். ஆகவே, நாளை மறுதினம் 22ஆம் திகதி அரசாங்கத்துக்கு மீண்டுமொருமுறை தெளிவாக இந்த விடயத்தை உணர்த்த உள்ளோம்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை தொழிற்சங்க கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எஸ்.டி. மெதிவத்த கருத்து வெளியிடுகையில்,

நாட்டு மக்கள், விவசாய, கல்விசார், சுகாதாரத்துறை மற்றும் நாட்டின் பல்வேறு துறைசார் தொழிற்சங்கங்களின் ஆதரவு இந்த போராட்டத்துக்கு வழங்கப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்க அனைவரும் அரசாங்கத்தின் மோசமான செயல்பாடுகளுக்கு எதிராக அணி திரள வேண்டும்-என்றார். (அ)

## பயங்கரவாத...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பத்திரிகைத்துறை ஜனநாயக ரீதியில் போராடுவதற்கான சுதந்திரத்தை பயங்கரவாத திருத்தச் சட்டம் இல்லாதொழித்துவிடும் . இதற்கு எதிராக நாடு தழுவிய ஹர்த்தாலை ஏற்பாடு செய்த போது ஒட்டுமொத்த மக்களும் ஆதரவளித்த நிலையில் மீண்டும் அடக்குமுறைகளை கொண்டு வருகின்ற இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது.

நாடு பொருளாதார ரீதியில் மோசமான நிலையிலும் வங்குரோத்து அடைந்து இருக்கின்ற நிலையிலும் ஜனநாயக மரபுகளை ஒழிக்கின்ற இத்தகைய செயற்பாடு மிக மோசமானது. மக்கள் ஜனநாயக ரீதியில் கருத்துக்களை வெளிப்படுத்தும்போது அது தடுக்கப்படுகின்ற நிலை இருக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடு.

ஐ.நா பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என கூறுகின்றபோதும் அரசாங்கம் அந்த சட்டத்தை நீக்கி அதற்கு நிகரான சட்டத்தை கொண்டு வர முயற்சிக்கிறது. ஆனால் சிங்கள மக்கள் உட்பட ஒட்டுமொத்த மக்களின் நிலைப்பாடும் பயங்கரவாத திருத்தச் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே. ஆகவே இந்த சட்டம் தொடர்பில் மீள் பரிசீலனை செய்யப்படவேண்டும்-என்றார். (அ)

## வடக்கில்...

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் காணிகளை விடுவிப்பதற்கு இணக்கப்பாடு காணப்படுகின்றபோதிலும் அவ்வாறு இடம் பெறுவதில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து பதிலளித்து கருத்துரைத்த வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, காணிகளை விடுவிக்கும் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும் என தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஏதேனும் பிரச்னைகள் காணப்படுமாயின் மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள முடியும்.

குறித்த காணிகள் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடம் முழுமையாக கையளிக்கப்பட்டு, பின்னர் மாவட்ட அரசாங்க அதிபர்களின் ஊடாக மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கூறினார்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், குறித்த செயற்பாடு தங்களது மக்களுக்கு நன்மையளிக்கும் விடயமாக அமையும் என குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சகல சத்திர சிகிச்சைகளும் நிறுத்தம்!

## மயக்க மருந்து நிபுணர் இல்லாமையே காரணம்

கொழும்பு, செப். 21

**அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் மயக்க மருந்து நிபுணர் இல்லாத காரணத்தினால் அனைத்து சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இப்பிரச்னையால் அப்பிரதேச மக்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும், இன்று சத்திர சிகிச்சைக்காக காலி முதல் மாத்தறை வரை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று பாராளுமன்றத்தில் சபை நடவடிக்கைகள் ஆரம்பமாகி கருத்து வெளியிடும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் -

அம்பாந்தோட்டை வைத்தியசாலையின் மயக்க மருந்து நிபுணர் முறையாக அறிவிக்காமல் வெளிநாட்டுக்கு சென்றுள்ளார்.

இதன் காரணமாக வைத்தியசாலையில் சகல சத்திர சிகிச்சைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

தயவு செய்து இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி உடனடியாக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மயக்க மருந்து நிபுணரை வழங்க வேண்டும் - என்றார். (அ)

# உயர்தரப் பரீட்சை குறித்து இன்று சபையில் அறிவிப்பு



கொழும்பு, செப். 21

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பில் இன்று அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறித்த பரீட்சையை பிற்போடுமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்தில் முன்வைத்த கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனை கூறினார்.

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை கடந்த மார்ச் மாதம் இடம்பெற்றிருந்தது.

குறித்த பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளுக்காக இணைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு காரணமாக, அதன் பெறுபேறுகள் வெளியாவதில் இரண்டு மாதங்கள் தாமதம் ஏற்பட்டது.

அதன்படி, குறித்த பெறுபேறுகள் கடந்த 4 ஆம் திகதி வெளியானது.

இந்தநிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பெரும்பாலான மாணவர்களும் கோரியுள்ளனர்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை பரிசீலனை செய்து எதிர்வரும் தினங்களில் பரீட்சை ஆணையாளர் அறிவிப்பொன்றை வெளியிடுவாரென எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைகள் தொடர்பில் அமைச்சின் விரிவான அறிக்கையொன்றை இன்று பாராளுமன்றில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

பெரும்பாலும், சாதகமானதொரு பதிலை முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். (அ)

# மெட்டா நிறுவன தலைவரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்

நியூயோர்க், செப். 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மெட்டா நிறுவனத்தின் உலகளாவிய விவகாரங்களுக்கான தலைவர் நிக் கிளேக் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் நியூயோர்க் நகரில் இடம்பெற்றுள்ளது.

இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாகப் பரப்பப்படும் வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் பொய்ப் பிரசாரங்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி இங்கு விளக்கமளித்தார்.

எதிர்காலத்தில் கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி கூறினார். அத்துடன், பாராளுமன்றக் குழுக்களின் மீளாய்வின் போது இந்த சட்டமூலத்தில் மேலும் திருத்தங்களைச் சேர்க்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை , செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப துறையின் அபிவிருத்திக்கான இலங்கையின் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி விரிவாக விளக்கினார்.



செயற்கை நுண்ணறிவுத் துறையில் இலங்கை அரசாங்கத்துக்கும் மெட்டா நிறுவனத்துக்கும் இடையிலான பங்காளித்துவத்திற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் இலங்கைப் பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்கு மெட்டா நிறுவனத்துடன் ஒத்துழைப்புத் திட்டத்தை நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டது.

தற்போதைய வேலைத்திட்டங்களுக்கு செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்ற நிலையில் இலங்கையில் செயற்கை நுண்ணறிவுத் துறையின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தி வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

# உத்திகவின் வாகனம் மீது சூடு; 13 பேரிடம் வாக்கு மூலம் பதிவு

கொழும்பு, செப். 21

அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் 13 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

இதன்படி, சில அனுமானங்களின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அனுராதபுரத்திலுள்ள தமது இல்லத்துக்கு காரில் பயணித்துகொண்டிருந்த போது, மற்றொரு காரில் பிரவேசித்த சிலர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச்சென்றனர்.

இது தொடர்பான சமர்ப்பணங்களை பொலிஸார் நீதிமன்றில் முன்வைத்தபோது, துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களையும் உடனடியாக கைது செய்யுமாறு அனுராதபுரம் பிரதான நீதவான் உத்தரவிட்டார்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் இரு அதிகாரிகளிடமும் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

இதேவேளை, தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டி.வீரசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (அ)

# காப்புறுதி செய்யப்படாத நிலையில் உள்ள ஜனாதிபதி செயலகத்தின் 28 வாகனங்கள்!

கொழும்பு, செப்

ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான 28 வாகனங்கள் காப்புறுதி செய்யப்படவில்லை என அண்மைய கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அந்த வாகனங்களில் 13 வாகனங்கள் அதியுயர் பாதுகாப்பு வாகனங்கள் எனவும், ஒரு வாகனத்தின் பெறுமதி 25 முதல் 30 கோடி ரூபா எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தணிக்கை அறிக்கையின்படி, தொடர்புடைய உயர் காப்பீட்டு வாகனங்களின் அதிக மதிப்பு காரணமாக, காப்பீட்டுக்காக ஒவ்வொரு வாகனத்துக்கும் ஆண்டுக்கு இரண்டு கோடி ரூபாய் செலுத்தவேண்டும்.

அதிக செலவு காரணமாக காப்புறுதி செய்யப்படவில்லை என ஜனாதிபதி செயலக கணக்கு அதிகாரி கணக்காய்வாளர் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் பின்பற்றப்படாவிடின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் மாற்றுக் கொள்கை முடிவுகளை அறிமுகப்படுத்தவேண்டும் எனவும், ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் விசேட தேவையுடையோருக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்க முடிவு

கொழும்பு, செப். 21

இந்த ஆண்டில் விசேட தேவையுடையோருக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்தார்.

நாட்டின் 22 மில்லியன் சனத்தொகையில் சுமார் 4 சதவீதத்தினர் விசேட தேவையுடையவர்களாக உள்ளதாக அரசாங்கத் தரவுகள் தெரிவிக்கின்றன.

சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சுமார் 30 சதவீதமான விசேட தேவையுடையோர், சுயதொழில் செய்பவர்கள் அல்லது தொழிலில் ஈடுபடுபவர்களாக உள்ளனர்.

எனினும், இலங்கையில் 3 சதவீதமான விசேட தேவையுடையவர்களே தொழிலில் ஈடுபடுவதாக தரவுகள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில், குறித்த எண்ணிக்கையை 10 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் என இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவெல் குறிப்பிட்டார்.

அத்துடன், அவர்களுக்கு வழமையாக சமூக நலன்புரி நன்மைகளுக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுயதொழில் உதவியாக வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவை 45 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவெல் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



### 2023 டேவிஸ் கிண்ணம்

# ஜெகோவிச்சின் சேர்பியாவை எதிர்கொள்கின்றது பிரிட்டன்

மலாகாவில் நடைபெறும் டேவிஸ் கிண்ண காலிறுதி போட்டியில் நோவக் ஜெகோவிச்சின் சேர்பியாவை எதிர்த்து பிரிட்டன் விளையாட உள்ளது.

இறுதியாக 2015 இல் வென்ற கிரேட் பிரிட்டன், இம்முறை நொக் அவுட் சுற்றில் சேர்பியாவை நவம்பர் 21 மற்றும் 26 ஆம் திகதிகளுக்குள் எதிர்கொள்ளவுள்ளது.

இந்த போட்டியில் வெற்றி பெறும் அணி அரையிறுதியில் இத்தாலி அல்லது நெதர்லாந்துடன் மோதும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான டேவிஸ் கிண்ண இறுதிப் போட்டிகளுக்காக, அவுஸ்திரேலியா, கனடா, செக்குடியரசு, பின்லாந்து, இங்கிலாந்து, இத்தாலி, நெதர்லாந்து, சேர்பியா ஆகிய நாடுகள் தகுதி பெற்றுள்ளன.

அதன்படி கனடாவுக்கு எதிராக பின்லாந்தும் செக் குடியரசுக்கு எதிராக அவுஸ்திரேலியாவும் இத்தாலிக்கு எதிராக நெதர்லாந்தும் செர்பியாவிற்கு எதிராக பிரிட்டனும் மோதவுள்ளன. (அ)

### உலகக் கிண்ணத் தொடர்

# காலநிலை, மைதான பராமரிப்புகள் தொடர்பில் ஐ.சி.சி. கூடுதல் கவனம்



இந்தியாவில் நடைபெறவிருக் கும் உலகக்கிண்ண தொடரில் காலநிலை மற்றும் நாணய சுழற்சி தொடர் பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தீவிர கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருவதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடை பெற்ற இருபதுக்கு இருப்பது உலகக் கிண்ண தொடர் பனியால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

இந்தியாவில் உள்ள மைதானங்கள் இந்த பனி மூட்டமான காலநிலையில் கூடுதலாக முதலாவதாக களத்தடுப்பில் ஈடுபடும் அணிக்கும் சுழற்பந்து வீச்சர்களுக்கும் மிகவும் சாதகமாக அமைந்தது.

இதனால் தற்போது இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண தொடருக்கு வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகும் வகையில் மைதானங்களில் இயலுமானவரை புற்களை விடுமாறு ஐ.சி.சி அறிவித்துள்ளது.

மேலும் இந்தியாவின் வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் உள்ள இடங்கள் இந்த பருவகாலத்தில் கடுமையான பனி பொழிவு மற்றும் சென்னை, பெங்களூர் உள்ளிட்ட நகரங்களில் கன மழைக்கான சாத்தியக்கூறுகளை காணப்படுகின்றது.

இதனால் அங்குள்ள மைதானங்களில் பவுண்டரிகளுக்கான அதிகபட்ச எல்லை 70 மீற்றராக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக சர்வதேச போட்டிகளில் குறைந்தபட்ச பவுண்டரி எல்லை 65 மீற்றரையும் அதிகபட்ச பவுண்டரி எல்லை 85 மீற்றரையும் கொண்டுள்ளன. (அ)

# உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை நேரில் காண ரஜினிக்கு கோல்டன் ரிக்கெட்



ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை நேரில் காண நடிகர் ரஜினிகாந்துக்கு இந்திய கிரிக்கெட் சபை தலைமை செயலாளர் ஜெய்ஷா "கோல்டன் ரிக்கெட்" வழங்கியுள்ளார்.

தமிழ் திரைப்பட உலகில் சூப்பர் ஸ்டார் ஆக இருக்கும் நடிகர் ரஜினிகாந்தை ஜெய்ஷா சந்தித்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்து இருக்கி றது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் நடைபெறுகிறது.

இந்த தொடர் நவம்பர் 19ஆம் திகதி வரை இந்தியாவில் உள்ள பத்து நகரங்களில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடருக்கான ஆயத்த பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், நடிகர் ரஜினிகாந்தை,இந்திய கிரிக்கெட் சபை தலைமைச் செயலாளர் ஜெய்ஷா நேரில் சந்தித்திருக்கிறார்.

உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பு அழைப்பாளராக அழைத்து எந்தவித பணமும் செலுத்தாமல் அனைத்து போட்டிகளையும் பார்க்கும் வசதி உடைய கோல்டன் ரிக்கெட்டுகள் இந்தியாவில் உள்ள பிரபலங்களுக்கு வழங்கப்படுகிறது.

முன்னதாக நடிகர் அமிதாப் பச்சன், கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், நடிகர் ரஜினிகாந்துக்கு இந்த சிறப்பு கௌரவம் அளிக்கப்பட்டு இருக்கிறது.

இதன் மூலம் நடிகர் ரஜினிகாந்த் நினைத்தால் இந்த உலகக் கோப்பை தொடர் நடக்கும் எந்த மைதானத்திற்கு சென்றும் இலவசமாக பார்க்கலாம். (அ)



# இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் பட் கம்மின்ஸ் தலைமையில் ஆஸி. அணி

இந்தியாவுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ள அவுஸ்திரேலியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளை கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி பஞ்சாப் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த தொடரில் அவுஸ்திரேலியா அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் உட்பட பல முக்கிய வீரர்கள் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அதற்கமைய பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலியா அணியில் சீன் அபோட், அலெக்ஸ் கேரி, நாதன் எல்லிஸ், கேமரூன் கிரீன், ஜோஷ் ஹேசில்வுட் , ஜோஷ் இங்கிலிஸ், ஸ்பென்சர் ஜான்சன், மார்னஸ் லாபுசாக்னே, மிட்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், தன்வீர் சங்கா , மேட் ஷார்ட், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டார்க், டேவிட் வோர்னர், மார்கஸ் ஸ்டோனிஸ், அடம் ஜம்பா ஆகியோர் அணியில் இணைந்துள்ளனர்.

எதிர்வரும் உலகக்கிண்ண தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில் அவுஸ்திரேலியா அணிக்கு இந்த தொடர் மிகவும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# புறக்கணிப்பை நிறுத்துவதற்கு ஸ்பெயின் வீராங்கனைகள் முடிவு

ஸ்பெயின் உதைபந்தாட்டப் பெண்கள் அணியில் பெரும்பாலானோர் தங்கள் புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டு வர ஒப்புக்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற கூட்டங்களுக்குப் பிறகு நேற்று புதன் கிழமை இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

இந்த மாத நேஷன்ஸ் லீக் போட்டிகளுக்கு அழைக்கப்பட்ட 23 வீரர்களில் இருவர் அணியில் இருந்து வெளியேற தீர்மானித்துள்ளனர்.

ஸ்பெயின் உதைபந்தாட்டக் கூட்டமைப்பு உடனடி மற்றும் ஆழமான மாற்றங்களுக்கு உறுதியளித்துள்ளதாக விளையாட்டுத்துறை செயலாளர் விக்டர் பிராங்கோஸ் கூறியுள்ளார்.

இதனை அடுத்து ஸ்பெயின் பெண்கள் அணியில் பெரும்பாலானோர் தங்கள் புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டு வர ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயின் பெண்களுக்கான உலகக்கிண்ண தொடரை வென்றதைத் தொடர்ந்து, ஸ்பெயின் உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் தலைவர் லூயிஸ் ரூபியேல்ஸ், ஜென்னி ஹெர்மோசோவை முத்தமிட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதனை கண்டித்துள்ள ஸ்பெயின் வீராங்கனைகள் கூட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்படும் வரை ஸ்பெயினைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடப் போவதில்லை என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



ஈழநாடு



# ஒரு சீக்கியரின் கொலை: இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே பதற்றத்தை ஏற்படுத்தியது எப்படி?



கடந்த ஜூன் மாதம் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள ஒரு குருத்துவராவுக்கு வெளியே சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்.

இந்த மரணம் அவரது ஆதரவாளர்கள் இடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சீக்கிய பிரிவினைவாதிகளுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே உலகளாவிய பதற்றத்தையும் ஏற்படுத்தியது.

சர்ரே நகரில் உள்ள குருநானக் சீக்கிய குருத்வாராவின் பரபரப்பான வாகன நிறுத்துமிடத்தில், ஹர்தீப் சிங் நிஜ்ஜாரை முகமூடி அணிந்த இரண்டு பேர் அவரது டிரக்கில் வைத்து சுட்டுக் கொன்றனர்.

பல மாதங்கள் ஆகியும் இந்தக் கொலையில் ஈடுபட்டவர்களைக் கண்டறிய முடியவில்லை. இந்தப் புதிரான கொலை கனடாவிலும், சர்வதேச அளவிலும் எதிரொலிக்கிறது. நூற்றுக்கணக்கான சீக்கிய பிரிவினைவாதிகள் டொராண்டோவிலும் லண்டன், மெல்போர்ன் மற்றும் சான் பிரான்சிஸ்கோ போன்ற நகரங்களிலும் ஜூலை தொடக்கத்தில், இந்திய அரசை எதிர்த்து போராட்டங்களை நடத்தினர். இந்திய அரசுதான் நிஜ்ஜாரின் கொலைக்கு காரணம் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

இப்போது நிஜ்ஜாரின் மரணத்துக்குப் பின்னணியில் இந்தியா இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியுள்ளார். நிஜ்ஜாரின் மரணத்திற்கும் இந்திய அரசின் ஏஜென்ட்களுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக "நம்பகமான அம்சங்களை" கனடா உளவுத்துறை அடையாளம் கண்டுள்ளது என்று அவர் கூறினார்.

ஆனால் இந்த கொலையில் எந்த தொடர்பும் இல்லை என்று இந்திய அரசு மறுத்துள்ளது.

45 வயதான நிஜ்ஜாரின் கொலையைத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு காரணமாக, இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 2 வீதமாக இருக்கும் மத சிறுபான்மையினரான சீக்கியர்களுக்கு தனி நாடு வேண்டும் என சில குழுக்கள் கோரி வருவது மீண்டும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

1980 களில் பஞ்சாப் மாநிலத்தில் பிரிவினை கோரிக்கை உச்சத்தில் இருந்தது. இதனால் பல வன்முறை தாக்குதல்கள் மற்றும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஆயுதப் படைகள் இதற்கு எதிராக சிறப்பு நடவடிக்கைகளை நடத்திய பின்னர் அது நீர்த்துப் போனது. ஆனால் புலம்பெயர் சமூகத்தில் உள்ள ஆதரவாளர்கள் தனி நாடுக்கான கோரிக்கைகளைத் தொடர்ந்து எழுப்பி வந்தனர். இது சமீபத்திய ஆண்டுகளில் தீவிரமடைந்துள்ளது.

காலிஸ்தான் தனிநாடு கோரிக்கைக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. பஞ்சாப் உள்பட நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகளும் வன்முறை மற்றும் பிரிவினைவாதத்தை கண்டித்துள்ளன.

**யார் இந்த நிஜ்ஜார்?**

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் ஒரு முக்கிய சீக்கிய நிஜ்ஜார். தனி காலிஸ்தான் வேண்டும் எனக் குரல் கொடுத்தவர். அவரது செயற்பாட்டினால் கடந்த காலங்களில் அவருக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர் ஒரு பயங்கரவாதி என்றும், தீவிரவாத பிரிவினைவாதக் குழுவை வழிநடத்தினார் என்றும் இந்தியா கூறியது. ஆனால் அவரது ஆதரவாளர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளை "ஆதாரமற்றது" என்று கூறுகின்றனர்.

கனடா புலனாய்வாளர்கள் நிஜ்ஜாரின் கொலைக்கான நோக்கம் என்ன என்று இன்னும் கண்டறியவில்லை. சந்தேக நபர்களையும் அடையாளம் காணவில்லை. ஆனால் இந்தக் கொலை "குறிவைக்கப்பட்ட சம்பவம்" என்று அவர் கூறுகின்றனர்.

கனடாவின் உலக சீக்கிய அமைப்பின் செய்தித் தொடர்பாளரான பல்ப்ரீத் சிங், காலிஸ்தான் இயக்கம் சமீபத்திய தசாப்தங்களில் செயலற்றதாகவும், அமைதியானதாகவும் இருக்கிறது என தாம் நம்புவதாகக் கூறினார்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் தலைநகர் லாகூரில் மே மாதம் பயங்கரவாதியாக இந்தியாவால் அறிவிக்கப்பட்ட பரம்ஜித் சிங் பஞ்வார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**இந்தியாவை தொடர்புபடுத்தி பேசிய கனடா பிரதமர்**

கனடாவுக்கும் இந்தியாவுக்குமான உறவில் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

கனடாவைச் சேர்ந்த சீக்கிய தலைவரான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் இந்திய அரசு இருக்கலாம் என அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். இந்திய தூதரக அதிகாரியையும் கனடா வெளியேற்றியுள்ளது.

கனடாவின் குற்றச்சாட்டை இந்திய அரசு மறுத்துள்ளது. கனடா தூதரகத்தின் மூத்த அதிகாரி நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகள் "மிகவும் கவலைக்குரியவை" என்று அமெரிக்காவின் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

கனடாவின் 'கடுமையான' குற்றச்சாட்டு குறித்து அந்த நாட்டுடன் தொடர்பில் இருப்பதாக பிரிட்டன் கூறியுள்ளது.

கனடா அதிகாரிகள் தொடர்ந்து புலனாய்வு செய்து வருவதால் இதுபற்றி மேலும் கருத்து தெரிவிப்பது சரியாக இருக்காது என்று பிரிட்டன் அரசு செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

**ஜஸ்டின் ட்ரூடோ பேசியது என்ன?**

அண்மையில் இந்தியாவின் தலைநகர் புதுதில்லியில் நடந்த ஜி-20 மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் இந்த விவகாரத்தை எழுப்பியதாக கனடா பிரதமர் ட்ரூடோ கூறினார்.

"கனடா மண்ணில் ஒரு கனடா குடிமகன் கொல்லப்பட்டதன் பின்னணியில் எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்தின் தலையீடும் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அது தங்கள் நாட்டின் இறையாண்மையை மீறுவது," என ஜஸ்டின் ட்ரூடோ திங்கள் கிழமையன்று கனடிய பாராளுமன்றில் கூறினார்.



"இது சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் ஜனநாயக சமூகங்களின் அடிப்படை விதிகளுக்கு முரணானது." என்று கூறினார்.

ஆனால் நிஜ்ஜார் கொலையில் தங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று இந்தியா முன்பு மறுத்திருந்தது.

**இந்திய தூதரக அதிகாரி வெளியேற்றம்**

ட்ரூடோவின் கருத்தைத் தொடர்ந்து, இந்த சம்பவம் தொடர்பாக இந்திய தூதரக அதிகாரி பவன் குமார் ராய், கனடாவிலிருந்து திங்களன்று வெளியேற்றப்பட்டதாக அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.





# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிந்ததா?

# பா.ஜ.க. பதிலடி எப்படி இருக்கும்?

தமிழகத்தில் அதிமுக - பா.ஜ.க. கூட்டணி இடையே கடந்த 2 ஆண்டுகளாகவே நீடித்து வந்த உரசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அ.தி.மு.க. சார்பில் அறிவிப்பு வெளியாகியுள்ளது. பா.ஜ.க.வுடன் இப்போதைக்கு கூட்டணி இல்லை என்று அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அறிவித்துள்ளார். அத்துடன், பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை குறித்தும் அவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இதனால், அதிமுக - பா.ஜ.க. கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டதா அல்லது இது ஒரு தற்காலிக முடிவு மட்டும்தானா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. ஜெயக்குமாரின் பேச்சுக்கு பா.ஜ.க. சார்பில் இன்னும் பதிலேதும் வரவில்லை. அதிமுகவுக்கு பா.ஜ.க. எந்த வகையில் பதிலடி கொடுக்கும் என்று தமிழ்நாடு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகிறது.








**அண்ணாமலை தலைவரானது முதலே உரசல்**

கடந்த சட்டமன்ற தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க. மாநிலத் தலைவராக அண்ணாமலை பொறுப்பேற்றது முதலே அதிமுகவுக்கும் பா.ஜ.க.வுக்கும் இடையிலான உறவு சுமூகமாக இல்லை. பா.ஜ.க.வை தமிழ்நாட்டில் வளர்த்தெடுக்கப் போவதாகக் கூறி அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் கூட்டணியில் மட்டுமின்றி, சொந்தக் கட்சியிலே கூட சலசலப்புகளை கிளப்பியது. தமிழ்நாடு பா.ஜ.க.வே இரு அணிகளாக பிரிந்து செயல்படுவதாகவும், அண்ணாமலைக்கு எதிராக ஒரு பிரிவினர் மும்முரமாக செயல்படுவதாகவும் செய்திகள் வெளியாயின. அக்கட்சியில் இருந்து வெளியேறிய காயத்ரி ரகுராம், நிர்மல் குமார் ஆகிய நிர்வாகிகள் அண்ணாமலை மீது முன்வைத்த குற்றச்சாட்டுகள் அதனை உறுதிப்படுத்தின.

ஒரு கட்டத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் பதவியில் இருந்தே அண்ணாமலை நீக்கப்படலாம் என்று கூட செய்திகள் வந்தன. ஆனால், இரு மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு வந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, அண்ணாமலையை வெகுவாக பாராட்டியதன் மூலம் அவரது செயல்பாடுகளை கட்சி மேலிடம் அங்கீகரிப்பதை உறுதிப்படுத்திவிட்டார். அதன் பின்னர் அண்ணாமலையின் செயல்பாடுகள் இன்னும் தீவிரமாயின. அவரது பேச்சுகள் பலவும் மாநிலத்தில் கூட்டணிக்கு தலைமையேற்றுள்ள அதிமுகவை சீண்டும் வகையில் இருந்தன.

கடந்த ஜூன் மாதம் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அண்ணாமலை அளித்த பேட்டியில் அதிமுக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவை மறைமுகமாக சீண்டும் வகையில் கருத்துகளை முன்வைத்திருந்தார். இதற்கு அதிமுக கடுமையாக எதிர்வினையாற்றியது. அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அண்ணாமலைக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியை அடிக்கடி சீண்டுவது மட்டு மின்றி, தமிழ்நாட்டில் திமுக - பா.ஜ.க. இடையே தான் அரசியல் நடக்கிறது என்பதாக அண்ணாமலையும் அவரது ஆதரவாளர்களும் பேசி வந்தது அதிமுகவை அதிருப்திக்குள்ளாக்கியது. இதனால், அண்ணாமலைக்கு எதிராக அவ்வப்போது அதிமுக மூத்த தலைவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தனர். "அரசியல் முதிர்ச்சியற்றவர், தலைமைப் பொறுப்புக்கு தகுதி இல்லாதவர்" என்பன போன்ற பல்வேறு விமர்சனங்களை அவர்கள் முன்வைத்தனர்.

இதன் தொடர்ச்சியாக, அதிமுக நிறுவனர் எம்.ஜி.ஆரின் அரசியல் ஆசானான அண்ணா மீதே பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கடுமையாக விமர்சித்தது அதிமுக - பா.ஜ.க. கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

**அண்ணா பற்றி அண்ணாமலை பேசியது என்ன?**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 11-ம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் அண்ணாமலை பங்கேற்றுப் பேசிய போது, முன்னாள் முதல்வர் அண்ணாதுரையை கடுமையாக விமர்சித்திருந்தார். அப்போது அவர், "1956-ம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் ஆலய வளாகத்தில் 10 நாட்கள் நடைபெற்ற ஒரு தமிழ் மாநாட்டின் 4ஆம் நாளன்று, மணிமேகலை என்ற குழந்தை தமிழ் சங்க இலக்கிய பாடல் ஒன்றை பாடியது. உடனே மைக்கை எடுத்துப் பேசிய அண்ணாதுரை, "ஓ, பாடல் நன்றாக இருந்தது. இதுவே முந்தைய காலத்தில் நடந்திருந்தால், உமையவளின் பாலை குடித்துத்தான் இந்த குழந்தை பாடியதாக கதை கட்டியிருப்பார்கள். இப்போதோ பகுத்தறிவு வந்துவிட்டது. யாரும் அதனை நம்ப மாட்டார்கள்" என்று கூறினார்.

ஆறாவது நாள் பேச வேண்டிய முத்துராமலிங்க தேவர் ஐந்தாவது நாள், அதாவது மறுநாளே மேடையேறினார். அப்போது பேசிய அவர், "சிவபுராணம் இயற்றப்பட்ட மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு வந்து உமயவளை தப்பாக பேசியது யார் என கேள்வி எழுப்பினார். எல்லோரும் நெளிகிறார்கள். அண்ணாதுரையை மதுரையில் ஒளித்து வைத்திருக்கிறார்கள். அவரால் வெளியே செல்ல முடியவில்லை. முத்துராமலிங்கத் தேவர் உக்கிரமாகப் பேசினார். கடவுளை நம்ப மறுப்பவர்கள், நம்புபவர்களைப் பற்றிப் பேசக்கூடாது. மதுரை மீனாட்சி அம்மனுக்கு இதுவரை பாலில் தான் அபிஷேகம் நடந்திருக்கிறது. மீண்டும் ஒருமுறை அவ்வாறு பேசினால், அம்மனுக்கு ரத்தத்தில் அபிஷேகம் நடக்கும் எனக் குறிப்பிட்டார். இதையடுத்து, முத்துராமலிங்கத் தேவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு அண்ணாதுரை, பி.டி. ராஜன் ஆகியோர் வந்தனர்" என்று அண்ணாமலை பேசியிருந்தார்.

**பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை - ஜெயக்குமார் அறிவிப்பு**

அதிமுக - பா.ஜ.க. முரண் முற்றிக் கொண்டிருந்த நிலையில், சென்னையில் திங்களன்று செய்தியாளர்களைச் சந்தித்த அதிமுக மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று அறிவித்தார். அவர் பேசுகையில், "தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை செயல்பாடுகள் குறித்து பாஜக மேலிடத்தில் புகாரளித்துள்ளோம். பல முறை எச்சரித்தும் அண்ணாமலை அலட்சியப்படுத்துகிறார். பாஜகவுடன் தற்போது அதிமுக கூட்டணியில் இல்லை. இது தான் அதிமுக கட்சி நிலைப்பாடு. கூட்டணி முறிவால் அதிமுகவுக்கு இழப்பு எதுவும் இல்லை. தனித்து நின்றால் நோட்டாவை கூட தாண்ட முடியாதவர் அண்ணாமலை. அதிமுகவுக்குள் ஒரு குழப்பமும் இல்லை. தேர்தல் வரும் போது தான் கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும்." என்றார்.

**அதிமுகவுக்கு பா.ஜ.க. பதிலடி கொடுக்குமா?**

பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று ஜெயக்குமார் அறிவித்திருந்தாலும் கூட, அக்கட்சியுடன் கூட்டணி சேர்வது குறித்து நாடாளுமன்ற தேர்தல் சமயத்தில் முடிவு செய்வோம் என்றும் கூறியிருக் கிறார். இதன் மூலம் பா.ஜ.க.விடம் இருந்து முழுமையாக விலகிவிடவில்லை என்பதையே அவரது பேச்சு உணர்த்துகிறது. அதிமுகவைப் பொருத்தவரை, பா.ஜ.க மேலிடத்துடன் நல்லுறவைப் பராமரித்தாலும் தமிழ்நாட்டில் மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையுடனான உறவுதான் சொல்லிக் கொள்ளும் படி இல்லை. அதேவேளையில், பா.ஜ.க. தரப்பில் இருந்தும் இன்னும் எந்தவொரு எதிர்வினையும் வரவில்லை.



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு "இந்தியா" என்ற பெயரில் ஒருங்கிணையும் எதிர்க்கட்சிகள் கூட்டணியை சமாளிக்க பா.ஜ.க.வும் தயாராகி வருகிறது. இந்த வேளையில், கூட்டணியில் பா.ஜ.க.வுக்கு அடுத்த பெரிய கட்சியான அதிமுகவை இழக்க அக்கட்சி விரும்பாது என்றே அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். ஆகவே, அதிமுகவுக்கு பா.ஜ.க.வின் பதிலடி எப்படி இருக்கும்? என்பதை இப்போதே அறுதியிட்டுக் கூற முடியாது என்பது அவர்களின் கூற்று.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பெரும் பிரச்னைகளை எதிர்நோக்கிறோம்!

## மன்னார் மீனவர் அமைப்புகள் சாடல்

மன்னார், செப். 21

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து தொடர்ந்தும் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு, தமது மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் சேதமாக்கப்படுவதால் தாங்கள் பெரும் பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் மாவட்ட மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் குறித்த நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் நேற்று புதன்கிழமை மதியம் ஊடக சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் தொடர் அத்துமீறிய நடவடிக்கையால் இலங்கை மீனவர்கள் குறிப்பாக வடக்கு மீனவர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எமது மீனவர்களின் பல இலட்சம் ரூபாய் மீன்பிடி வலைகளை கடலில் வைத்து சேதப்படுத்தி சென்றுள்ளனர்.

இதனால் மீனவர்கள் தற்போது பல்வேறு பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.இந்திய மீனவர்கள் தற்போது மன்னார் கடற்பரப்பிற்குள் வந்து மீன் பிடித்துச் செல்கின்றனர். இதனால் மன்னார் மீனவர்கள் வெறும் கையுடன் கரை திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பெண் மீனவ தொழிலாளர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். மீனவர்களுக்கு மீன் பாடு குறைந்தால் பெண் தலைமைத்துவ மீனவ குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றனர்.

குறிப்பாக பெண் தலைமைத்துவ மீனவ குடும்ப பெண்கள் கருவாட்டுக்கு மீன் வெட்டுதல்,வலையில் இருந்து மீன்களை அகற்றுதல் உள்ளிட்ட வேலைகள் செய்து வருகின்றனர். இதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வைத்து தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்போது கடலில் விடும் வலைகள் இந்திய மீனவர்களின் டோலர் படகுகளால் சேதமாக்கப்படுகின்றமை மற்றும் மீன்பாடு இல்லாத காரணங்களால் அவர்கள் தமது வேலை வாய்ப்பை இழக்கின்றனர்.

இலங்கை கடல் பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைந்து மீன் பிடித்துச் செல்லும் வரை கடற்படை கடலில் கிடந்து என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை எனவே இவ்விடத்தில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களால் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ஐ)

# இணையத்தில் வைரலாகும் அமைச்சர் ஒருவரின் நடனம்

கொழும்பு, செப். 21

அமைச்சர் ஒருவர் இலங்கையிலுள்ள வெளிநாட்டு பிரஜைகளுடன் நடனமாடிய காட்சி தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

ஆபிரிக்க வம்சாவளியை சேர்ந்த இலங்கையர்களுடனேயே அமைச்சர் நடனமாடியுள்ளார்.

இலங்கையில் ஆபிரிக்க வம்சாவளியை சேர்ந்தவர்கள் புத்தளம் - கல்பிட்டி பகுதியில் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களுடன் அமைச்சர் இவ்வாறு நடனமாடியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டுள்ளது.

காணொளியில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவே இவ்வாறு நடனமாடி ஆபிரிக்க வம்சாவளி இலங்கையர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளார். (அ)

# கொழும்பு சிறைகளில் தட்டம்மை பரவுகிறது

கொழும்பு, செப். 21



கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, சமீப நாட்களாக மகசின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளிலும் தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்ட கைதிகள் பதிவாகியுள்ளனர்.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட சுமார் 30 கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலையில் உள்ளதோடு, சிறைச்சாலைகளில் நோய் பரவாமல் தடுப்பதற்காக சிறைச்சாலைகளில் தடுப்பு ஊசி போடும் திட்டத்தை சிறைச்சாலைகள் திணைக்களம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

# சிறுமி துஷ்பிரயோகம் 26 வயது நபர் கைது!

ஹற்றன், செப். 21

பதினாறு வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் 26 வயது நபர் ஒருவர் பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த யுவதி தனது தாயுடன் பியகம பெரக சந்திய பிரதேசத்தில் உள்ள விடுதி அறையில் தங்கியிருந்த நிலையில், திருமணமான அந்த நபர் குறித்த சிறுமியுடன் உறவைப் பேணினார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், சந்தேக நபர் சிறுமி விடுதியில் இருக்கும் போது அவர் மீது இந்தக் குற்றத்தை செய்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இவர்கள் இருவரும் ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

